# தமிழ்
# பால பாரதி
## வகுப்பு நான்கு





Tele MANAS
National Tele Mental Health Programme
14416

# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி- மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.

# மனோதர்பன்

வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.

இப்பாடநூல் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மகாராஷ்டிரா, புனே தயாரித்த பாடத்திட்டம் மற்றும் பாட நிர்ணயத்தின்படி தயாரிக்கப்பட்டு, இந்தப் பாடநூல், இந்நிறுவனத்தின் மூலம் சரிபார்க்கப்பட்டது. அரசு தீர்மானம் எண் : அபயாஸ் - 2116/(ப்ர எண் 43/16) எஸ்டி - 4 நாள் 25/04/2016 இன் படி நிறுவப்பட்ட ஒருங்கிணைப்பு குழுவின் 13/04/2026 ஆம் நாளின் கூட்டத்தில் இப்பாடநூலை 2026-2027 கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்
# பால பாரதி

## வகுப்பு நான்கு




மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே-411004.

பக்கத்தில் உள்ள சதுரத்தில் காணப்படும் விரைவுக் குறியீட்டை (Q.R. Code) ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதனால் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூல் மற்றும் பாடநூலில் உள்ள உட்பிரிவுகளுக்குத் தொடர்புடைய ஒலி, ஒளி, ஒலி - ஒளி வடிவிலான கற்றல், கற்பித்தல் உபகரணங்களைப் பெறலாம்.

© மகாராஷ்டிர மாநிலப்பாட நூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே - 411004.

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், இப்பாடநூல் தொடர்பான அனைத்து உரிமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலிலுள்ள எந்தப் பகுதியையும் மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் ஆய்வுக்கழகம் இயக்குநரின் எழுத்துபூர்வ அனுமதியின்றி மறு உருவாக்கம் செய்யக்கூடாது.

முதல் பதிப்பு 2026

**தமிழ் மொழிக்குழு :**

திருமதி. பானுமதி சங்கர், குழுதலைவர்

திருமதி. கீதா கிறிஸ்டோபர், உறுப்பினர்

திருமதி. சித்ரா பாலசுப்ரமணியன், அழைப்பு உறுப்பினர்

திருமதி. மரிய வசந்தா சேவியர், அழைப்பு உறுப்பினர்

திரு. ஜெரோம் ஜெய்சிங், அழைப்பு உறுப்பினர்

திரு. டேவிட் கிருபா சுவாமிதாஸ், அழைப்பு உறுப்பினர்

திரு. ரெ. சிவா, சிறப்பு பங்களிப்பு

முனைவர். துலசி பாரத் பூஷண், உறுப்பினர் - செயலாளர் (C.B.)

**மறு ஆய்வு :**

திருமதி. எஸ். செந்தாமரை செல்வி (மதிப்பாய்வு)

திரு. எஸ். ஏ. கனகராஜ் (சட்ட நிபுணர்)

டாக்டர். ஜெயந்தி நாராயணன் (CWSN நிபுணர்)

**ஒருங்கிணைப்பு**

**முனைவர். துலசி பாரத் பூஷன்**

சிறப்பு அதிகாரி - தெலுங்கு (C.B.)

மகாராஷ்டிரா மாநிலப் பாடநூல் கழகம், புனே.

**அச்சு கோர்ப்பு**

ஜே.கே. ஆர்ட்ஸ், மும்பை

**காகிதம் :** 70 ஜி.எஸ்.எம். க்ரீம் வேவ்

**பதிப்பு ஆணை எண் :**

**பதிப்பாளர் :**

**அட்டைப்படம் :**

திரு. பட்டு இராமதாஸ் பாக்லே

**படங்கள் :**

திரு. ஸ்ரீநிவாஸ் கண்டூரி

**தயாரிப்பு**

**திருமதி. மிதாலி ஷித்தப்**

I/C முதன்மை அதிகாரி

**திரு. ,இராஜேந்திர பாண்டுலுஸ்கர்**

தயாரிப்பு அதிகாரி

**வெளியிடுவோர்**

**திரு. ஹேமந்த் வி. பாபர்**

I/C கட்டுப்பாட்டு அதிகாரி

மகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்க கழகம், மும்பை - 25.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை
**இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச்
சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு
குடியரசாக நிறுவவும்,
அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய,
பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன்
வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு
இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை,
வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை
எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த
உறுதியுடையராய்,
**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர்
இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த
அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே
வழங்கிக்கொள்கிறோம்.**

## இந்திய அரசியலமைப்புச் சட்டம்

### பகுதி 4A

## குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு 51A

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு:**

A) அரசிலமைப்புக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்புடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்.

B) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பணிக்காத்து பின்பற்றி நடத்தல்.

C) இந்தியாவின் இளையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்.

D) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்.

E) சமய, மொழி, வட்டார, பிரிவனை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல், பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்.

F) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்.

G) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்.

H) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்.

I) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல், வன்முறையை விட்டொழித்தல்.

J) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்.

K) 6 முதல் 14-வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
        பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
        திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
        உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
        காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
        பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

# முகவுரை

அன்பு மாணவ நண்பர்களே!

புதிய கல்வி ஆண்டு தொடங்கி உள்ளது. தமிழ் பாலபாரதி வகுப்பு 4 புத்தகத்தை உங்கள் கரங்களில் தருவதில் நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறேன்.

மூன்றாம் வகுப்பில் நீங்கள் சொற்களையும், வாக்கியங்களையும் வாசிக்கவும், ஏழுதவும் கற்றிருப்பீர்கள். இந்த நான்காம் வகுப்பு பாடப் புத்தகத்தில் புதிய கதைகள், கவிதைகள், உரையாடல்கள், படக்கதைகள், பட வர்ணனை, தகவல் கட்டுரைகள் ஆகியவற்றை வாசிப்பதில் மகிழ்வீர்கள். இந்த பாடப்புத்தகத்தில் உள்ள பாடங்கள் உங்களை சிந்திக்க வைக்கும். புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். உங்கள் கற்பனைத் திறன் மேலும் விரிவடையும்.

இந்தப் பாடப் புத்தகத்தில் உள்ள பாடல்களை உங்களால் தாளத்துடனும் இசையுடனும் பாட முடியும். நீங்கள் இந்தப் பாடல்களை வாசிக்கும் பொழுதும் நண்பர்களோடு சேர்ந்து பாடும்பொழுதும் மகிழ்வீர்கள். கவிதைகளை வாசிக்கும் பொழுது பாட வேண்டும் எனத் தோன்றும். கதைகளை வாசிக்கும் போது உங்களுடைய சுய அனுபவத்தை நினைவு படுத் தும். ஒவ்வொரு பாடத்திற்கும் கவிதைக்கும் கொடுக்கப்பட்ட வண்ணமயமான மற்றும் பேசும் படங்கள் உள்ளடக்கத்தை புரிந்து கொள்ள உதவி புரியும். சில நேரங்களில் படங்களைப் பார்த்து நீங்கள் சுயமாக கதை எழுதலாம்.

இந்த பாடப்புத்தகத்தில் உள்ள பல்வேறு தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்ட செயல்களையும் செய்வதால் உங்களுடைய மொழி திறன்கள் மேம்படும். நாங்கள் இதை புரிந்து கொண்டோம், சிந்திப்போம் பேசுவோம், எழுதுவோம், சொற்களோடு விளையாடுவோம், செயல்களின் தீர்வுகளைக் காண மற்றும் எழுத நீங்கள் நிச்சயம் விரும்புவீர்கள். இச்செயல்களின் மூலம் உங்கள் சொல்வளம் பெருகும். புத்தகத்தில் உள்ள செயல் திட்டங்களும் செயல்பாடுகளும் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

இந்த பாடப்புத்தகத்தின் மூலம் நீங்கள் வீட்டில், பள்ளியில், சுற்றுப்புறத்தில் பேசும்பொழுது அழகான மற்றும் சரளமான தமிழ் மொழியைத் தன்னம்பிக்கையோடு பயன்படுத்த அறிவீர்கள். மாணவ நணபர்களே, இந்தப் பாடப் புத்தகத்தை நீங்கள் மனதார மகிழ்வோடும் வாசியுங்கள். பாடப் புத்தகத்தில் உள்ள அனைத்து பாடங்களையும் நன்றாக புரிந்து கொள்ளுங்கள்.

மாணவ நண்பர்களே, உங்கள் கல்விப் பயணத்திற்கு மனப்பூர்வமான வாழ்த்துகள்.

**அனுராதா ஓக்**
**இயக்குநர்**
மகாராஷ்டிரா மாநிலப் பாடநூலாக்கம்
மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

புனே
**நாள்:** 19 ஏப்ரல் 2026
**இந்திய ஆண்டு:** 02 வைசாக் 1948
**அக்ஷய திருதிய**

## கற்றல் திறன் மற்றும் கற்றல் விளைவு

| கற்றல் திறன் | கற்றல் விளைவு | |
|---|---|---|
| C1-1 | 1 பல்வேறு சூழல்களில் சரணமாகவும் அர்த்தமுள்ளதாகவும் உரையாடுதல். | |
| 1.1.1 | நிகழ்வுகள், சூழ்நிலைகள், கதைகள், பாடல்கள் அல்லது அன்றாட அனுபவங்கள் போன்றவற்றைப் பற்றி கூகுப்புத் தோழர்களுடன் கலந்துரையாடுதல். | 7,14,17,20,38,67 |
| 1.1.2 | கதைகள், பத்திகள், பகுதிகள், செய்திகளைக் கேட்டு அவற்றை குழுவாக விவாதித்தல். | 2,23,38,50,60,71,84 |
| 1.1.3 | நடந்த சம்பவங்கள் நிகழ்வுகள் அன்றாட அனுபவங்களை ஒத்திசையுடன் வெளிப்படுத்துதல். | 31,45,60,63,67,72 |
| 1.1.4 | கொடுக்கப்பட்ட தலைப்பில் எட்டு முதல் பத்து வாக்கியங்களில் புரிதலுடன் உரையாடலை வழங்குதல். | 10,14,17,26,56 |
| C1.2 | வகுப்பில் வாசிக்கப்பட்ட இலக்கியங்களில் இருந்து அடிப்படைக் கருத்துகளை விரிவுபடுத்துதல் மற்றும் சுருக்கமாகக் கூறுதல். | |
| 1.2.1 | பல்வேறு வகையான உள்ளடக்கங்களைக் கேட்டு மற்றும் வாசித்து அதன் முக்கிய கருத்துக் கூறுதல். | 2,6,16,22,35,60,67 |
| 1.2.2 | உரையின் முக்கிய கருத்தை விரிவாக விளக்குதல். | 31,45,63,85 |
| 1.2.3 | இலக்கியத்தின் உள்ளடக்கத்தை விவரித்தல் | 7,16,31,60,85 |
| 1.2.4 | வகுப்பறையில் வாசித்த இலக்கிய பகுதியில் உள்ளடக்கத்தை சுருக்கமாகக் கூறுதல். | 3,7,26,39,55 |
| C1.3 | பல்வேறு வகையான வாய்மொழி விளக்கக் காட்சிகளை நடத்துதல். உதாரணமாக, வாழ்த்து கூறுதல் சிறிய நிகழ்ச்சியகளைத் தொகுத்து வழங்குதல், சிறு உரைகள் நிகழ்த்துதல், வகுப்பில் நடக்கும் சொற்போர் நிகழ்ச்சியில் எடுத்தல் போன்றவை. | |
| 1.3.1 | கூறப்பட்ட / கேட்கப்பட்ட பொருளைப் பற்றி, அலகைப் பற்றி, ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் தகவல்களைத் தருதல். | 3,7,26,37,55 |
| 1.3.2 | பண்டிகைகள், கொண்டாட்டங்கள், சிறப்பு தின நிகழ்ச்சிகளுக்கான வாழ்த்துகளை தெரிவித்தல் மற்றம் அவைகள் பற்றிய தகவல்களை கூறுதல். | 8,10,21,22,56 |
| 1.3.3 | பள்ளியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கவிதைகள், அபிநயப் பாடல்கள், வில்லுப்பாட்டுகள் போன்ற வாய்மொழி விளக்கக் காட்சிகளை வழங்குதல். | 3,10,23,51,44 |
| 1.3.4 | 4 கொடுக்கப்பட்ட தலைப்பில் சொந்த அபிப்பிராயத்தை முன்வைத்தல். | 2,7,14,17,26,39,67 |
| C2.1 | 1 பல்வேறு வகையான உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ள வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்துதல் (தீர்மானித்தல், கணிப்புகளை அனுமானித்தல் காட்சி சாயல் உருவாக்குதல் போன்றவை). | |
| 2.1.1 | வாசித்த உள்ளடக்கத்தின் (உரைநடை மற்றும் கவிதைகள் நிகழ்வுகளை வரிசைப்படுத்துதல்). | 7,16,53,54,60,65,74, 83 |
| 2.1.2 | உள்ளடக்கத்தில் உள்ள நிகழ்வுகள் மற்றும் கதாபாத்திரங்கள் பற்றி பேசுதல். | 16,54,64,82 |
| 2.1.3 | உள்ளடக்கத்தில் உள்ள நிறுத்தற்குறிகளை முற்றுப் புள்ளி, காற் புள்ளி, வினாக்குறி, ஒற்றை, இரட்டை மேற்கோள், வியப்பு குறிகள் பயன்படுத்துதல். | 26,30,36,51,60,85 |
| 2.1.4 | வாசித்த உள்ளடக்கத்தின் கருத்துகளை கனித்து அதனை சொந்த வார்த்தையில் கூறுதல். | 6,16,22,31,35,72 |
| 2.1.5 | வாசித்த உள்ளடக்கத்தின் பற்றி நான்கு முதல் ஐந்து வாக்கியங்களில் தொகுப்புரை மற்றும் கருத்துரை வழங்குதல். | 7,14,27,60,65 |
| C2.2 | மையக்கருத்தைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் வாசித்த இலக்கியத்தில் இருந்து தேவையான தீர்வுகள் எடுத்தல் அறிவியல் சொற்களஞ்சிய மேம்பாடு. | |
| 2.2.1 | 1. வாசித்த பல்வேறு இலக்கியங்களில் இருந்து அதன் கருத்து நிகழ்வுகள் கதாபாத்திரங்களின் பண்புகள் கதாபாத்திரங்களை பற்றிய சுய கருத்துகளை வெளிப்படுத்துதல். | 10,39,47,67 |
| 2.2.2 | வாசித்த பல்வேறு இலக்கியங்களில் இருந்து அதன் கருத்து நிகழ்வுகள் கதாபாத்திரங்களின் பண்புகள் கதாபாத்திரங்களை பற்றிய கருத்துகளை வெளிப்படுத்துதல். | 10,39,47,67 |
| 2.2.3 | வாசித்த இலக்கியங்களில் உள்ள உரைநடை/கவிதைகள் மற்றும் கருத்து முடிவுகளை கூறுதல். | 70,71,78,83 |
| C3.1 | எழுத்து நியமானங்கள் பயன்படுத்துதல், வரிசையைத் தீர்மானித்தல், தலைப்பு/துணை தலைப்புகளை அடையாளம் காணுதல் முன்னுரை, முடிவுரை, பொருளுரை உருவாக்குதல். | |
| 3.1.1 | கொடுக்கப்பட்டுள்ள சொல் குழுக்களில் இருந்து ஒத்திசைவான வாக்கியங்களை உருவாக்கி எழுதுதல். | 38,44,55,72,79 |
| 3.1.2 | சுற்றுச்சூழலில் நிகழ்ந்த நிகழ்வுகளை வரிசைப்படுத்தி சொந்த அனுபவத்தின் அடிப்படையில் பத்தி ஏழுதுதல். சொந்த கருத்தைப் பயன்படுத்தி முடிவுகளை எடுத்தல். | 17,22,38,63 |
| 3.1.3 | அறிமுகம் இல்லாத உள்ளடக்கத்தை வாசித்து அதற்கு ஏற்ப தலைப்பை எழுதுதல். | 18,84 |
| 3.1.4 | பல்வேறு இலக்கிய வகைகளில் சொந்த அனுபவங்களை நான்கு முதல் ஐந்து வாக்கியங்களில் ஏழுதி அதற்கு பொருத்தமான தலைப்பை வழங்குதல். | 18,75 |
| C3.2 | கொடுக்கப்பட்ட உள்ளடக்கத்தின் தலைப்பு, கருத்து மற்றும் புரிதலை வெளிப்படுத்தும் தெளிவான மற்றும் ஒத்திசைவான பத்திகளை எழுதுதல். | |
| 3.2.1 | 1 கொடுக்கப்பட்ட உள்ளடக்த்தின் முக்கிய கருத்து மற்றும் தலைப்பை அடையாளம் காணுதல் | 70,26,10 |
| 3.2.2 | கொடுக்கப்பட்ட உரையின் நிகழ்வுகளை பற்றி தனது சொந்த கருத்தை கூறுதல். | 32 |
| 3.2.3 | கொடுக்கப்பட்ட தலைப்பில் ஆறு முதல் எட்டு வாக்கியங்களில் தெளிவான மற்றும் ஒத்திசை வான பத்தியை எழுதுதல். | 61,55,48 |

| | | |
|---|---|---|
| C3.3 | சுவரொட்டிகள், கையெழுத்துப் பிரதிகள் அழைப்பிதழ்கள், கவிதைகள், கதைகள் மற்றும் உரையாடல்கள் போன்றவற்றை எழுதுதல். | |
| 3.3.1 | பல்வேறு தலைப்பில் சுவரொட்டிகளை உருவாக்குதல். | 34,40 |
| 3.3.2 | கொடுக்கப்பட்ட தலைப்பில் கையெழுத்துப் பிரதியை தயாரிப்பதற்கா பொருள்களை சேகரித்து அதனை எழுதுதல். | 38,48,60 |
| 3.3.3 | பல்வேறு தலைப்புகளில் சுவரொட்டிகளை உருவாக்குதல். | 10,23 |
| 3.3.4 | தனது சொந்த அனுபவத்தை உரையாடல் வடிவில் எழுதுதல். | 10,56 |
| C3.4 | எழுதுதலில் இலக்கணம் முறைமைப்படி சரியான சொற்களையும் தொடரியலையும் பயன்படுத்துதல். | |
| 3.4.1 | பொருத்தமான நிறுத்தற்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்றுபுள்ளி, வினக்குறிகள், வியப்புக் குறிகள், ஒற்றை மற்றும் இரட்டை மேற்கோள் குறிகள்) பயன்படுத்தி ஐந்து முதல் ஆறு வாக்கியங்களில் ஒரு உரையை எழுதுதல். | 85,56,61 |
| 3.4.2 | எழுத்துப் பிழையின்றி எழுதும் விதிகளைக் கருத்தில் கொண்டு வார்த்தை மற்றும் வாக்கியம் உருவாக்குதல். | 6,18,30,38,48,51,71 |
| 3.4.3 | உரிச்சொல், வினைச் சொல், காலம் ஆகியவற்றை அறிதல் | 17,18,23,38,45,63, 73 |
| C4.1 | ஒரு வார்த்தையின் வெவ்வேறு அர்த்தங்களையும் ஒரே பொருளை கொண்ட வெவ்வேறு சொற்களையும் புரிந்து கொள்ளுதல். | |
| 4.1.1 | ஒத்த சொற்கள் மற்றும் எதிர்ச் சொற்களைச் சேகரித்தல். | 2,14,26,34,47,71 |
| 4.1.2 | பல அர்த்தங்களை கொண்ட சொற்களை சேகரித்தல் | 38,71,75 |
| 4.1.3 | சொற்களின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அவற்றை நடைமுறையில் பயன் படுத்துதல். | 30,34,38,44,48,55 |
| C4.2 | பல்வேறு வார்த்தை பட விளையாட்டுகள் மூலம் சொல்லகராதியை சளப்படுத்த ஆர்வம் காட்டுதல் | |
| 4.2.1 | நேரடி செயல், வார்த்தை விளையாட்டுகள் மூலம் புதிய சொற்களை சேகரித்தல் | 3,7,39,48 |
| 4.2.2 | பல்வேறு வார்த்தை மாற்று வார்த்தைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுதல். | 30,38,44 |
| 4.2.3 | மொழி விளையாட்டின் மூலம் சொற்களஞ்சியம் திரட்டுதல். | 7,71,79 |
| 4.2.4 | துணை வாசிப்பு பொருள்களில் இருந்து மொழி விளையாட்டு மூலம் சொற்களஞ்சியம் திரட்டுதல் | 7,45,63,72 |
| 4.2.5 | குறுக்கெழுத்துப் புதிர்களின் தீர்வு காண்தல் | 7,35,67 |
| C4.3 | வாசிப்பதன் மூலம் சொல் அகராதியைப் பெறுதல். எ.கா. தாலாட்டு, கும்மிப்பாட்டு, தெம்மாங்கு, ஒப்பாரி, வில்லுப்பாட்டு போன்றவை. | |
| 4.3.1 | வாசித்த நாட்டுப்புற இலக்கியங்களில் இருந்து புதிய அறிமுகமற்ற சொற்களைப் பட்டியலிடுதல் பக்தி பாடலில் உள்ள அறிமுகம் இல்லாத சொற்களுக்குப் பள்ளி சொல் அகராதியில் இருந்து பொருள் கண்டறிதல். | 14,48 |
| 4.3.2 | பக்தி பாடலில் உள்ள அறிமுகமற்ற சொற்களின் பொருள் கண்டரிதல் | 39,48 |
| 4.3.3 | நாட்டுப்புற இலக்கியங்களை வாசித்து அறிமுகம் இல்லாத வார்த்தைகளை பட்டியலிடுதல் | 14,39 |
| 4.3.4 | நாட்டுப்புற இலக்கியங்களை வாசித்து சொந்த மொழியில் மீண்டும் கூறுதல். | 51,67,74,85 |
| C5.1 | வாசித்தலுக்காக நூலகத்தில் இருந்து தொடர்ந்து புத்தகங்கள் எடுத்தல். | |
| 5.1.1 | நூலகத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுதல் | 7,10,31,72 |
| 5.1.2 | நூலகத்தில் உள்ள புத்தகங்களை சுயமாகக் கையாண்டு அவைகளை ஏற்ற மாதிரிகளின் படி வகைப்படுத்துதல் | 22,72 |
| 5.1.3 | பள்ளி நூலகத்தில் இருந்து துணை மற்றும் குறிப்பு புத்தகங்களைத் தவறாமல் தொடர்ந்து பரிமாற்றம் செய்தல். | 10 |
| 5.2.1 | நூலகப் புத்தகங்களைப் படித்து அதிலிருந்து பிடித்த பகுதியைப் பற்றி கூறுதல் | 6,22,31 |
| 5.2.2 | பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் மின் நூலகத்தைப் பயன்படுத்துதல் | 10,48,80 |
| C5.3 | செய்தித்தாளில் தலைப்புகள்/தலைப்பு செய்திகளை வாசித்தல் மற்றும் தகவல்களை ஈட்டுதல் ஆர்வம் காட்டுதல். | |
| 5.3.1 | செய்தித்தாளகளிலுள்ள பல்வேறு தலைப்புகள்/தலைப்புச் செய்திகளை வாசித்தல் | 10,39,38 |
| 5.3.2 | வாசித்த செய்திகளைப் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்தல். | 39,36,72 |
| 5.3.3 | ஒரு அறிவிப்புப் பலகையில் செய்தித் துணுக்குகளைக் காட்சிப் படுத்துதல் | 80,39 |
| 5.3.4 | வகுப்புத் தோழர்களிடம் கேட்ட மற்றும் படித்த செய்திகளைப் பற்றி சொல்லுதல். | 39,72 |

**மேலே கொடுக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச கற்றல் விளைவுகளை மாணர்கள் கற்பித்தல் மூலம் பெறவேண்டியது அவசியம் ஆகும். கற்றல் விளைவுகளுக்கு முன்னால் கொடுக்கப்பட்டுள்ள பக்க எண்கள் மட்டுமின்றி, மற்ற பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களின் மூலம் பிற கற்றல் விளைவுகளை அடைய முடியும் என்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய முயற்சி செய்ய வேண்டும்.**

**குறிப்பு சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்கான கற்றல்-கற்பித்தல் செயல்பாட்டின் போது சைகை மொழி மற்றும் பிற துணைகற்பித்தல் முறைகளை பயன் படுத்த வேண்டும். சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்கள் தங்களால் இயன்ற வழிகளில் தங்களை வெளி்படுத்தி கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.**

# பொருளடக்கம்


| வரிசை எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | வேற்றுமையில் ஒற்றுமை - ரெ. சிவா | 1 |
| 2 | நான்கு நண்பர்கள் | 4 |
| 3 | நாடு காத்த நல்லோர் | 8 |
| 4 | கடல் - கவிமணி தேசிக விநாயகம் | 13 |
| 5 | கண்ணாமூச்சி - ஏஞ்சல் | 15 |
| ✪ | வாசிப்புப் பகுதி - 1 | 19 |
| 6 | தேர்த் திருவிழா | 20 |
| 7 | மிதிவண்டி - மு. மகேந்திர பாபு | 25 |
| 8 | நேர்மையே வெல்லும் | 28 |
| 9 | மலர்களின் மகத்துவம் | 32 |
| 10 | செய்தித்தாள் - இ. குழந்தைசாமி | 37 |
| ✪ | வாசிப்புப் பகுதி - 2 | 40 |
| 11 | யானையும் பானையும் | 41 |
| 12 | இனியவை நாற்பது - பூதஞ்சேந்தனார் | 46 |
| 13 | போறாளே பொன்னுத்தாயி | 49 |
| 14 | மகிழ்ச்சியான தீபாவளி | 53 |
| 15 | உழவே தலை | 57 |
| ✪ | வாசிப்புப் பகுதி - 3 | 61 |
| 16 | கணக்குப் போட்ட யானை | 62 |
| 17 | விழிப்புணர்வு | 65 |
| 18 | வீரமங்கை வேலுநாச்சியார் - ரெ. சிவா | 68 |
| 19 | விடியல் | 74 |
| 20 | திருக்குறள் - திருவள்ளுவர் | 77 |
| 21 | காக்கைகளின் எண்ணிக்கை | 82 |
| ✪ | வாசிப்புப் பகுதி - 4 | 86 |
| | சொல் அகராதி | 87 |

# 1. வேற்றுமையில் ஒற்றுமை



- **பாடி மகிழ்வோம்**

நாடு நமது நாடு
நாடு நம் தாய்நாடு
நாடு இந்தியத் திருநாடு

பலப்பல இனங்கள்
பலப்பல மொழிகள்
வேறுபாட்டில் ஒற்றுமை
நம் நாட்டின் பெருமை
(நாடு)

அறிவின் வளர்ச்சி
சிந்தனை முதிர்ச்சி
வாழ்வுக்கு ஒளி ஏற்றும்
உலகுக்கே வழி காட்டும்
(நாடு)

பலப்பல நிலங்கள்
பலப்பல வளங்கள்
ஓயாத உழைப்பே
நம் நாட்டின் சிறப்பே
(நாடு)

கல்வியில் சிறந்த நாடு
கலைகளில் சிறந்த நாடு
பண்பாட்டில் உயர் நாடு
நம் பாரதத் திருநாடு



## இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்!**

1. நமது நாடு எது?
2. நம் நாட்டின் பெருமைகள் யாவை?
3. நமது நாட்டின் சிறப்பு யாது?
4. கலைகளில் சிறந்த நாடு எது?
5. நம் நாட்டில் பேசப்படும் மொழிகள் சிலவற்றைக் கூறுக.

**ஆ) முதல் எழுத்து ஒன்று போல வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

________________________________________

**இ) இறுதி எழுத்து ஒன்று போல வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

________________________________________

**ஈ) ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுக.**

________________________________________

**உ) 'நம் நாடு இந்தியா' என்ற தலைப்பில் 5 அல்லது 6 வாக்கியங்களைக் கூறுக.**

**ஊ) 'ஒற்றுமை' என்ற சொல்லின் எதிர்ச்சொல்லை வட்டமிடுக.**

1) நன்மை 2) வேற்றுமை 3) தீமை

**எ) அறிந்து கொள்வோம்.**

| | |
|---|---|
| 1. தேசிய விலங்கு | 1. புலி |
| 2. தேசியக் கொடி | 2. மூவண்ணக் கொடி |
| 3. தேசிய மலர் | 3. தாமரை |
| 4. தேசியப் பறவை | 4. மயில் |

## படத்தைப் பார்ப்போம்! அறிந்து கொள்வோம்!

இந்தியாவின் பராம்பரிய கலைகளான நடனம், ஓவியம், சிற்பம், இசை, கைவேலைகள் போன்றவை நமது கலாச்சாரம், ஆன்மிகம் இவற்றில் உள்ள பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கின்றன. இந்திய மாநிலங்களின் சிறப்பு நடனங்கள் சிலவற்றைப் படத்தில் காணுங்கள்.


பரதநாட்டியம்
தமிழ்நாடு


கதகளி
கேரளா


கோலி நடனம்
மகாராஷ்டிரா


பாங்க்ரா
பஞ்சாப்


தாண்டியா
குஜராத்


மணிப்புரி
மணிப்பூர்

**ஆசிரியர் குறிப்பு :** பாடலைக் குழுவாகவும், தனியாகவும் பாடப் பயிற்சி அளிக்க வேண்டும். இதைப் போன்ற நாட்டுப்பற்று மிக்க பாடல்களை மாணவர்கள் கேட்கவும் பாடவும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.

# 2. நான்கு நண்பர்கள்

- **வாசிப்போம்! மகிழ்வோம்!**



அது ஓர் அழகான காடு. நிழல் தரும் மரங்களும் செடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்த காடு. அங்கே பல விலங்குகள் வசித்து வந்தன. அவ்விலங்குகளிடையே ஒரு மான், ஆமை, எலி மற்றும் காகம் ஆகியவை நண்பர்களாக வாழ்ந்து வந்தன. தினமும் ஒன்றை ஒன்று சந்தித்து உரையாடியும் விளையாடியும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தன.

ஒரு நாள் அந்தக் காட்டிற்குள் வந்த மனிதர் வழியில் ஆமை ஒன்று நகர்ந்து செல்வதைப் பார்த்தார். அதனை தன் வீட்டிற்கு எடுத்துச் செல்ல எண்ணினார். அந்த ஆமையைக் கையில் எடுத்து வலையில் போட்டுக் கொண்டு நடந்தார். வலையில் சிக்கிய ஆமை வெளியேற முடியாமல் தவித்தது.

இதனைக் கண்ட காகம், கா! கா! என கரையத் தொடங்கியது. இதனைக் கேட்ட எலியும் மானும் அங்கே ஓடி வந்தன. அவை யாவும் சேர்ந்து ஆமையை மீட்கத் திட்டமிட்டன. அதன்படி மான் மனிதனின் முன்னே மெதுவாக மெதுவாக நடந்து சென்றது. இதனைக் கண்ட மனிதன் மானையும் பிடிக்க நினைத்தான். உடனே தன் கையில் இருந்த ஆமையை கீழே வைத்துவிட்டு



மானைப் பிடிக்கச் சென்றான்.

சற்று தூரம் மெதுவாக மெதுவாக சென்ற மான் பின்னர் வேகமாக ஓடியது. மானின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அந்த மனிதன் திணறினான். பிறகு ஆமையை எடுத்து செல்லலாம் என முடிவு செய்தான். இதற்கிடையே எலி வலையை பல்லால் கடித்து ஆமையை வலையிலிருந்து விடுவித்தன.

பின்னர் காகம் ஆமையை அருகில் உள்ள ஏரியின் உள்ளே சென்று விடுமாறு கூறியது. ஆமை ஏரியில் இறங்கித் தப்பித்தது. அந்த மனிதன் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான். மானின் பின்னால் செல்லாமல் இருந்தால் ஆமையை வீட்டிற்கு கொண்டு வந்து இருக்கலாமே என நினைத்தான்.

மறுநாள் நான்கு நண்பர்களும் வழக்கமான இடத்தில் சந்தித்தன. மானும் எலியும் காகத்திற்கு நன்றி கூறின. ஆமை மற்ற நண்பர்களுக்கு நன்றி கூறியது. ஒற்றுமையாக இருந்தால் எந்த ஆபத்து வந்தாலும் தப்பித்து கொள்ளலாம் என்பதை உணர்ந்து கொண்டன.

**நீதி : ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**

## இவற்றைச் செய்வோம்

அ) **பேசுவோம் வாருங்கள்!**

1. ஆமையின் நண்பர்கள் யார்? யார்?
2. காகம் என்ன செய்தது?
3. மான் ஏன் நொண்டி நொண்டி நடந்து சென்றது?
4. மனிதன் ஏன் ஆமையை கீழே வைத்தான்?

ஆ) **சிந்தித்து எழுதுக.**

1. மான் எவ்வாறு தப்பித்தது?
2. இக்கதையின் நீதியை எழுதுக.

இ) **நூலகத்தில் நீ வாசித்தக் கதையை வகுப்பில் உரக்கக் கூறவும்.**

ஈ) **இக்கதையில் வரும் எலி, மான், காகம் போன்றவை ஆமைக்கு எவ்வாறு உதவின?**

காகம் : ________________________________

எலி : ________________________________

மான் : ________________________________

- **இக்கதையில் வரும் விலங்குகளைப் போல் முகமூடிகள் அணிந்து, கதையை வகுப்பில் நடித்துக் காட்டுக.**



உ) **தகுந்த எதிர்ச்சொல்லைக் கொண்டு சொற்றொடரை மாற்றி எழுதுக.**

1. வினய் வேகமாக ஓடினான்.
2. மரத்தின் கீழே என்ன இருக்கிறது?
3. வீட்டின் உள்ளே நாற்காலி இருக்கிறது.

ஊ) கட்டங்களில் உள்ள விலங்குகளின் பெயர்களை எடுத்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒ | ட் | ட | க | ம் | கு | ப |
| வ | ச | சு | சே | ம் | தி | ட |
| அ | ப | ர | க | தா | ரை | மை |
| னி | ஆ | ங் | தா | ஞ் | ஆ | ம் |
| ல் | சி | று | த் | தை | க | டு |
| தே | ன் | க | ங் | கா | ரு | மி |
| மா | மீ | டி | ர | க | ழு | தை |

ஏ) கீழ்க்காணும் சொற்களின் நடுவில் ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குவேன்.

(எ.டு) கதை → கவிதை __________, கந்தை __________

1. கவி → __________, __________
2. அவை → __________, __________
3. படு → __________, __________

**தகுந்த எழுத்துகளால் சொற்களை நிறைவு செய்க.**

1. த - கம்
2. ம - சுளா
3. வ - டி
4. த - தம்
5. ம-றம்
6. பண் - ம்



உனக்குப் பிடித்த விலங்கு பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

**ஆசிரியர் குறிப்பு :** இக்கதையில் வரும் கதாபாத்திரங்களின் பண்புகளைப் பற்றி மாணவர்களோடு கலந்துரையாடவும். பள்ளி நூலகத்தில் இருந்து புத்தகங்களை எடுத்து வாசித்து வகுப்பறையில் கூறச் சொல்லவும்.

# 3. நாடு காத்த நல்லோர்

- உரையாடி மகிழ்வோம்.

**காட்சி ஒன்று**

**ஆசிரியை** : வணக்கம் மாணவர்களே!

**மாணவர்கள்** : வணக்கம் அம்மா!

**ஆசிரியை** : நம் பள்ளியில் சுதந்திர தின விழா நடைபெற உள்ளது அதற்கான கலை நிகழ்ச்சிகளில் மாறுவேட நிகழ்ச்சியும் ஒன்று.

**நிஷா** : நாங்கள் என்ன அம்மா செய்ய வேண்டும்?

**ஆசிரியை** : நம் நாட்டின் விடுதலைக்கு பாடுபட்ட ஆன்றோர்களைப் போல வேடம் அணிந்து வர வேண்டும்.

**சரவணன்** : அம்மா, நான் திலகர் வேடம் அணிந்து வருவேன். ஆனால் அவரைப் பற்றி பேசத் தெரியாதே!

**ஆசிரியை** : பள்ளி நூலகத்திற்குச் சென்று அவர்களைப் பற்றிய புத்தகங்களில் தேடி எடுக்க வேண்டும்.

**அமுதா** : பள்ளி நூலகத்திற்குத் தான் செல்ல வேண்டுமா?

**ஆசிரியை** : இணைய நூலகத்தையும் பயன்படுத்தலாம். இணைய நூலகத்தில் உண்மையானத் தகவல்களைத் தேட வேண்டும்.

**சுரேஷ்** : நன்றி அம்மா!

**காட்சி இரண்டு**

(விழா மேடையில் தலைமை ஆசிரியர் உரையாற்றுகிறார்)

**தலைமை ஆசிரியர்** : நிகழ்ச்சியை நடத்த நான்காம் வகுப்பு மாணவி நிஷாவை அழைக்கிறேன்.

**நிஷா** : வணக்கம், அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துகள்! மாறுவேடம் அணிந்து மாணவர்கள் வர இருக்கிறார்கள். முதலாவதாக வருபவர் சரவணன்.

**சரவணன்** : 'சுயராஜ்யம் என் பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்' என முழங்கிய வீர பால கங்காதர திலகர் நானே.



| | | |
|---|---|---|
| நிஷா | : | அடுத்து வருவது யார் என நீங்களே கண்டுபிடியுங்கள்! |
| அமுதா | : | முதல் இந்திய விடுதலைப் போரில் ஆங்கிலேயரை எதிர்த்து தைரியமாக போராடிய ஜான்சி ராணி இலக்குமிபாய் நான் தான்! |
| நிஷா | : | ஜான்சி ராணியைத் தொடர்ந்து யார் வருகிறார் பாருங்கள்! |
| சுரேஷ் | : | அச்சமில்லை! அச்சமில்லை! என ஆங்கிலேய ஆட்சியை அகற்ற பல நாட்டுப்பற்று மிக்கப் பாடல்களை எழுதிய பாரதியார் நான் தான்! |
| நிஷா | : | மிக்க நன்றி மகாகவி அவர்களே! அடுத்து வருவது யாரோ?. |
| நளினி | : | கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்து போரிட்ட முதல் பெண் விடுதலை போராட்ட வீராங்கனை சிவகங்கை அரசி வேலுநாச்சியார் நானே!. |
| நிஷா | : | சபாஷ்! மாறுவேடத்தில் வந்து தங்கள் திறமையை வெளிப்படுத்திய மாணவமணிகளுக்குப் பாராட்டுகள். இத்துடன் மாறுவேட நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. நன்றி வணக்கம். |

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. உங்கள் பள்ளியில் கொண்டாடப்படும் விழாக்கள் எவை?
2. நீ எந்தக் கலைநிகழ்ச்சியில் சேர விரும்புவாய்?
3. விழாவில் மாறுவேடம் அணிந்து வந்த மாணவர்கள் யார்? யார்?

### ஆ) சிந்தித்து எழுதுக!

1. இணைய நூலகத்தில் நீ சேகரித்த தகவல்களைப் பட்டியலிடுக.
2. பால கங்காதர திலகரின் முழக்கம் யாது?

### இ) படத்தைப் பார்ப்பேன்! பத்தியை வாசிப்பேன்!

மும்பையில் உள்ள வித்யா மந்திர் பள்ளியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. விழாவில் சிறப்பு விருந்தினராக காவல்துறை அதிகாரி திரு. அருண் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவர் கொடியேற்ற அனைவரும் கொடிவணக்கம் செய்தனர். பின்னர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே முடிந்தது.



1. சுதந்திர தின விழா எந்தப் பள்ளியில் கொண்டாடப்பட்டது?
2. சிறப்பு விருந்தினராக வந்தது யார்?
3. படத்தில் கொடியேற்றுவது யார்?
4. பள்ளியில் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளை எழுதுக.

### ஈ) உரையாடலை நிறைவு செய்க.

தலைமை ஆசிரியை : மாணவச் செல்வங்களே! நீங்கள் எல்லோரும் இன்று அருமையாகப் பேசினீர்கள்.

மாணவர்கள் : ____________

**ஆசிரியர் குறிப்பு :** பள்ளியில் நிகழும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த மாணவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளிக்க வேண்டும். நிகழ்ச்சிகள் பற்றியக் குறிப்புகளை பள்ளி நூலகத்திலோ அல்லது இணைய நூலகத்திலோ பெற உதவி அளிக்க வேண்டும். அழைப்பிதழ் தயாரிக்கக் கூறவும். பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு

# மொழியை அறிவோம்



எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள்

உயர்ந்து நிற்பது மலை

உயிர்களைக் காப்பது மழை






மாதங்களில் ஒன்று ஆனி

சுவற்றில் அடிப்பது ஆணி





காதால் கேட்பது ஒலி

மெழுகுவர்த்தி தருவது ஒளி





விறகை எரித்தால் கரி

வீட்டில் சமைப்பது கறி



## மயங்கொலி எழுத்துகள்

உச்சரிப்பில் சிறிய வேறுபாடு மட்டுமே இருந்து பெரும்பாலும் ஒரே மாதிரியான ஒலியைத் தந்து பொருளில் மாறுபடும் எழுத்துகள் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

| ல,ள,ழ | ர,ற | ன,ண,ந |
|---|---|---|
| | | |

### பத்தியை வாசித்து மயங்கொலிச் சொற்களை வட்டமிடுக.

காலை இளம் வெயிலில் நானும் என் நண்பனும் என் வீட்டிற்கு அருகில் இருந்த குளத்திற்குச் சென்றோம். அங்கே ஒரு காளை மாடு நின்று கொண்டிருந்தது. என் நண்பன் மண் சட்டியில் நீர் நிரப்பி அடுப்பு மூட்டி அதன் மேல் வைத்தான். அதில் உலை கொதித்த பின்னர் அரிசியும் காய்கறிகளும் சேர்த்தான். சூரிய ஒளி கதிர்கள் வெப்பத்தை அதிகரிக்க சுற்றிலும் பறவைகளின் ஒலி அடங்கி இருந்தது. உலையில் கொதித்த உணவின் நறுமணம் காற்றில் பரவியது. நான் வாழைத் தோட்டத்தில் இருந்து இலைகளைப் பறித்து வந்தேன். என் நண்பன் உணவு பரிமாற இருவரும் வயிறார உண்டோம்.

# 4. கடல்

- **பாடி மகிழ்வோம் :**

எல்லை அறியாப் பெருங்கடலே – நீதான்
இரவும் உறங்காயோ? கடலே
அல்லும் பகலும் அலை கடலே – உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே
பொங்கு திரைகளோ? கடலே
புரவி நிரை தாமோ? கடலே!
எங்கும் உனதொலியோ? கடலே! அன்றி
இடியின் முழக்கமோ? கடலே
மலையை வயிற்றடக்கும் கடலே! எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! – சிப்பி
விளையாடதற்கு உதவும் கடலே!
மழைக்கு மூலமும் நீ கடலே – அதை
வாங்கி வைப்பதும் நீ, கடலே
வழுத்து மகிமையெல்லாம் கடலே! எவர்
மதித்து முடிக்க வல்லார் கடலே



## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. இந்தப் பாடலின் ஆசிரியர் யார்?
2. கடல் பற்றி உனக்குத் தெரிந்த இரண்டு வாக்கியங்களைக் கூறுக.
3. அலுப்பு இல்லாதது எது?
4. கடல் வயிற்றில் எதனை அடக்கி வைத்து இருக்கிறது?

### ஆ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'புரவி' என்ற சொல்லுக்கு பொருள் தருக: ______________

அ. குதிரை    ஆ. யானை    இ. சிங்கம்

2. சரியான பொருளைத் தேர்ந்தெடுக்க 'அல்லும் பகலும்' : ________

அ. இரவும் பகலும்    ஆ. மலையும் மழையும்    இ. தாயும் சேயும்

### இ) சிந்தித்து பேசுவேன்.

1. கடல் இரவில் உறங்காது ஏன்?
2. கடலின் பயன்கள் குறித்து உன் வகுப்பறையில் நண்பர்களுடன் கலந்துரையாடுக.

### ஈ) கீழ்க்காணும் பொருள்களில் எவை கடலில் இருந்து கிடைப்பவை என்பதை ✓ செய்க.










**ஆசிரியர் குறிப்பு :** பாடலை அபிநயத்துடன் பாடவும், அறிமுகமற்றச் சொற்களைப் பட்டியலிட்டு அவற்றின் பொருளை அகராதியில் தேடவும் பயிற்சி அளிக்க வேண்டும்.

# 5. கண்ணாமூச்சி

## • வாசிப்போம், மகிழ்வோம்!

**(கண்ணாமூச்சி கதையை எழுதியவர் ஏஞ்சல் அரசுப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கிறார். இவரது கதைகள் கடற்கன்னி எலினா என்ற சிறுகதைத் தொகுப்பாக வானம் பதிப்பகத்ததால் வெளியிடப்பட்டுள்ளன.)**

ஓர் அழகான ஊர்ல நிறைய பசங்க இருந்தாங்க, அவங்கயெல்லாம் சனி, ஞாயிறு லீவு விட்டா அந்த ஊர்ல இருந்த பெரிய மர நிழல்ல ஜாலியா விளையாடுவாங்க.

அப்படி ஒரு நாளு எல்லோரும் கண்ணாமூச்சி விளையாடும் போது முதல்ல ரிச்சா கண்ணை மூடிட்டு ஒண்ணு, ரெண்டு.... பத்து வரை எண்ணினா. எல்லோரும் ஒளிஞ்சிக்கிட்டாங்க.




ஏ... யவன் வெளியே வா... அவுட்... அவுட்...

செடிக்கு பின்னால கால் தெரியுது, வெனிடா... மோகன்... அவுட் அப்படின்னு எல்லாத்தையும் அவுட் ஆக்கிட்டா ரிச்சா.

இப்போ யவன் கண்ணை மூடிட்டு எண்ண ஆரம்பிச்சான் எல்லோரும் ஒளிஞ்சிக்கிட்டாங்க.

மோகனுக்கு லேசா பசிச்சிச்சி. அதோட அவங்க அம்மா காலைல செஞ்ச இனிப்பு பணியாரமும் ஞாபகம் வந்திச்சு.

யாருக்கும் தெரியாம அப்படியே வீட்டுக்குப் போய் வயிறு நெறைய பணியாரம் சாப்பிட்டுட்டு அப்படியே தூங்கிட்டான்.

அங்க யவன் எல்லாரையும் கண்டுபிடிச்சிட்டு மோகன எல்லா எடத்துலயும் தேடித் தேடி கிடைக்கவே இல்ல.

எல்லோரும் தேடினாங்க. ஆனா எங்கேயும் அவன் இல்ல. பயந்துட்டாங்க எல்லோரும்.

அப்ப வெனிடா, நாம போய் மோகன் அம்மாட்ட சொல்லலாம்னு சொன்னா.

எல்லோரும் கிளம்பி மோகன் வீட்டுக்குப் போனாங்க.

அத்தை... அத்தை... மோகன காணோம் அத்தைனு... சொன்னாங்க. அதுக்கு அவங்க என்ன மோகன் காணோமா? அவன் உள்ளதானே தூங்குறான் அப்படின்னாங்க.

எல்லோரும் வேகமா உள்ள போய் மோகன் எந்திரிடானு எழுப்பினாங்க.

மோகன் கண்ணை தேச்சிட்டே எழுந்து பார்த்தான்.

என்னடா சொல்லாம வந்தேன்னு கோவமா கேட்டாங்க.

சரிடா... எனக்கு லேசா பசிச்சிச்சி. அதான், அப்படின்னான். எல்லோருக்கும் சிரிப்பு வந்துடிச்சி.

**ஆசிரியர் குறிப்பு :** நூலகத்தில் உள்ள பல்வேறு விதமான கதைப்புத்தகங்களை வாசித்து அதன் சுருக்கத்தை வகுப்பில் கூற வாய்பளிக்க வேண்டும். கதையின் முடிவுகளையும் மாற்றிக் கூறவும் ஊக்கப்படுத்த வேண்டும்.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. குழந்தைகள் என்ன விளையாட்டு விளையாடினார்கள்?
2. இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களின் பெயர்களைக் கூறுக.
3. மோகன் விளையாட்டின் இடையே என்ன செய்தான்?

### ஆ) சிந்தித்து எழுதுக :

- மோகன் உண்மையிலேயே காணாமல் போனானா?

### இ) கிராமங்களில் விளையாடப்படும் பாண்டி ஆட்டம் விளையாட்டு குறித்து உன்பெற்றோருடன் கலந்துரையாடுக.



### ஈ) பேச்சு வழக்கு சொற்களைச் சரியான முறையில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. ஊர்ல | - ஊரில் | 6. ஜாலியா | - ________ |
| 2. பசங்க | - ________ | 7. விளையாடுவாங்க | - ________ |
| 3. இருந்தாங்க | - ________ | 8. ஒருநாளு | - ________ |
| 4. அவங்கயெல்லாம் | - ________ | 9. ஒண்ணு | - ________ |
| 5. நிழல்ல | - ________ | 10. இரண்டு | - ________ |

**உ) சரியான சொல்லைத் தேர்ந்தெடுக்க.**

1. அமலா கிணற்றிலிருந்து ________ (நீரை/நீறை) இறைத்தாள்.
2. கடலின் நிறம் ________ (நீலம்/நீளம்) ஆகும்.
3. கவியரசு மேடையில் ________ (பாடல்கலைப்/பாடல்களைப்) பாடினான்.
4. கனிந்த ______ (வாளைப்பழம்/வாழைப்பழம்) உண்பதற்கு இனிமையாக இருக்கும்.
5. காட்டில் ________ (மரங்கள்/மறங்கள்) உயரமாக வளர்ந்திருக்கும்.



**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி பத்தி ஒன்று எழுதுக.**

பொருத்தமான தலைப்பிடுக.

கிராமம் - ஆறு - பாலம் - இரு ஆடுகள் - எதிர் எதிராக - ஒருவர் மட்டும் - கடக்கக்கூடியது பேசின - ஒத்துழைப்பு - மறுபக்கம்

- **மும்பையில் மழைக்காலம் பற்றி சிந்தித்து படம் வரைந்து வண்ணம் தீட்டுக.**



# கல்விக் கண் திறந்த காமராஜர்



காமராஜர் தமிழ்நாட்டில் உள்ள விருதுநகரில் 1903 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 15ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை குமாரசாமி நாடார், தாயார் சிவகாமி அம்மையார் ஆவார். இவர் நுண்ணறிவு மிக்கவர், தேசபக்தி மிகுந்தவர், ஏழை எளியவர் பால் பேரிரக்கம் கொண்டவர்.

இளமையிலேயே இந்திய தேசிய காங்கிரஸில் தேச பிதா காந்தியடிகளுடன் இணைந்தார். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு பலமுறை சிறை சென்றார். தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக 1954 முதல் 1963 வரை 9 ஆண்டுகள் பணியாற்றினார். ஏழை குழந்தைகளின் கல்வியை மனதில் கொண்டு பல ஆயிரம் பள்ளிகளைத் திறந்தார். மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார் அதனால் இவரை ‘கல்வி கண் திறந்த காமராஜர்’ எனப் போற்றுகின்றனர்.

உழவு தொழில் சிறக்க பல திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தினார். இவரது ஆட்சிக்காலம் தமிழகத்தின் பொற்காலம் ஆகும்.

# 6. தேர்த்திருவிழா

• வாசிப்போம்! மகிழ்வோம்!

(விளையாட்டுத் திடலில் நண்பர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்)

**அவினாஷ்** : சுந்தர்! பத்து நாள்களாக நீ விளையாட வரவில்லையே எங்கே போனாய்?

**சுந்தர்** : எங்கள் ஊர் தேர்த் திருவிழாவுக்குச் சென்றேன்.

**விஜய்** : திருவிழா என்றாலே கொண்டாட்டம் தான்.

**சுந்தர்** : ஆம், ஊர் முழுவதும் தோரணங்களால் அலங்கரித்து இருந்தார்கள். எல்லோருடைய வீட்டு வாசல்களிலும் பெரிய பெரிய கோலங்கள் போடப்பட்டிருந்தன.

**கீர்த்தி** : கொஞ்சம் விவரமாக சொல்கிறாயா? நான் கிராமங்களில் நடக்கும் திருவிழாவைப் பார்த்ததே இல்லை.

**சுந்தர்** : சொல்கிறேன், கேளுங்கள். மொத்தம் நான்கு நாட்கள் விழா நடந்தது. முதல் நாள் முளைப்பாரி விழா.

**கீர்த்தி** : முளைப்பாரியா? என்ன அது?

**சுந்தர்** : நவதானியங்களை முளைக்க வைத்த



முளையுடன் கூடிய பானைகளே முளைப்பாரி. ஒவ்வொரு வீட்டிலும் முளைப்பாரி வளர்ப்பார்கள். விழா நாளில் ஊர்வலமாக ஆட்டம் பாட்டத்துடன் கோவிலுக்கு எடுத்துச் செல்வார்கள்.

**லலிதா** : பிறகு... அடுத்த நாள் என்ன செய்தார்கள்?

**சுந்தர்** : அடுத்த நாள் ஊர்ப் பொங்கல். கோவில் அருகில் திறந்தவெளியில் குடும்பம் குடும்பமாய் பொங்கல் வைத்து படையல் செய்து உண்டு மகிழ்ந்தோம்.

**அவினாஷ்** : மூன்றாவது நாள் என்ன நிகழ்ச்சி இருந்தது?

**சுந்தர்** : கரகாட்டம், கோலாட்டம், ஒயிலாட்டம்,மயிலாட்டம் என்று விதவிதமான கலை நிகழ்வுகள் இருந்தன.

**கீர்த்தி** : தேர்த்திருவிழாவை மறந்து விட்டாயே?

**சுந்தர்** : மறப்பேனா! கடைசி நாள் தேர்த் திருவிழா. தேர் மரத்தினாலானது, அதைப் பூக்கள் மற்றும் அலங்காரத்



துணிகளால் அழகுபடுத்துவார்கள். முப்பது அடி உயரம் இருக்கும். கனமான கயிற்றைக் கொண்டு நான்கு வீதிகளிலும் இழுத்து வருவார்கள்.

**கீர்த்தி** : ஊர்க்காரர்களே இழுத்தார்களா?

**சுந்தர்** : ஆமாம். எல்லோரும் இழுப்போம், அதுதானே ஒற்றுமை!

**கீர்த்தி** : பிறகு சாப்பிட என்ன செய்தாய்?

**சுந்தர்** : சாப்பாட்டுக்கா பஞ்சம்! எத்தனை விதவிதமான பலகார கடைகள், அப்பா நிறைய பண்டங்கள் வாங்கிக் கொடுத்தார். நன்றாகச் சாப்பிட்டேன். அதிலும் அந்தப் பனிக்கட்டி குச்சி ஐஸ்... மிக மிக அருமை.

**லலிதா** : பனிக்கட்டி குச்சி ஐஸா? அது எப்படி இருக்கும்?

**சுந்தர்** : பனிக்கட்டியை ஓர் இழைப்பானில் தேய்ப்பார்கள். அது தேங்காய்ப் பூ போல டம்ளரில் விழுகிறது. நடுவில் ஒரு குச்சியை வைத்து நன்றாக அழுத்தி எடுத்தால் குச்சி ஐஸ். அதன் மீது பல வண்ணங்களை ஊற்றுவார்கள். பார்க்கவும் அருமை, சுவைக்கவும் அருமை.

**விஜய்** : கேட்டாலே சாப்பிட வேண்டும் போல் உள்ளது!

**அவினாஷ்** : மிக அருமையாகத் தேர்த்திருவிழாவை விவரித்தாய்.

**அனைவரும்** : நேரில் பார்த்தது போலவே இருந்தது. நன்றி சுந்தர்.

**ஆசிரியர் குறிப்பு :** நூலகத்தில் உள்ள பல்வேறு விதமான கதைப்புத்தகங்களை வாசித்து அதன் சுருக்கத்தை வகுப்பில் கூற வாய்ப்பளிக்க வேண்டும். கதையின் முடிவுகளையும் மாற்றிக் கூறவும் ஊக்கப்படுத்த வேண்டும்.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. உன் சொந்த ஊர் எது? அங்கே நீ எந்தத் திருவிழாவிற்கு சென்றிருக்கிறாயா?
2. முளைப்பாரி என்றால் என்ன?
3. சுந்தரின் நண்பர்கள் யாவர்?
4. திருவிழாவில் எந்தெந்த கடைகள் இருக்கும்.

### ஆ) சிந்தித்து எழுதுக!

1. திருவிழாவுக்குச் சென்றால் கூட்டத்தில் எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும்?
2. நீ கலந்து கொண்ட ஏதேனும் ஒரு விழாவைப் பற்றி வருணனை செய்து நான்கு அல்லது ஐந்து வரிகளில் எழுதுக.

### இ) வில்லுப் பாட்டு நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, உன் பள்ளி ஆண்டு விழாவில் நிகழ்த்திக் காட்டுக.



### ஊ) செயல் திட்டம்.

மண்பானைகளில் நவதானியங்களை முளைக்க விடவும். பின்னர் வகுப்பிற்கு எடுத்துச் சென்று காட்சிப்படுத்தவும். முளைப்பாரி பாடல்களை காணொலியில் (Digital Classroom) கண்டு மகிழவும். விழா அழைப்பிதழ் தயாரிக்கக் கூறவும்.



## மொழியை அறிவோம்

**படங்களைப் பார்த்து சொற்களைக் கவனமாக வாசியுங்கள்.**



மஞ்சள்



உண்டியல்



பந்து



சங்கு

**ங், ஞ், ண், ந்** என்ற எழுத்துகளுக்கு அருகில் உள்ள எழுத்துகளை உற்று நோக்குங்கள்.

| | |
|---|---|
| ங் - எழுத்துக்கு அருகில் | க வரிசை எழுத்துகள் |
| ஞ் - எழுத்துக்கு அருகில் | ச வரிசை எழுத்துகள் |
| ண் - எழுத்துக்கு அருகில் | ட வரிசை எழுத்துகள் |
| ந் - எழுத்துக்கு அருகில் | த வரிசை எழுத்துகள் |
| ம் - எழுத்துக்கு அருகில் | ப வரிசை எழுத்துகள் |
| ன் - எழுத்துக்கு அருகில் | ற வரிசை எழுத்துகள் வரும். |

இவற்றை நாம் **இன எழுத்துக்கள்** என்கிறோம்.

- ங் க
- ஞ் ச
- ண் ட
- ந் த
- ம் ப
- ன் ற

# 7. மிதிவண்டி



* **பாடி மகிழ்வோம்!**

காலை மாலை வேளையில்
பள்ளி தினமும் செல்லவே
அப்பா வாங்கித் தந்தது!
அழகாய் சாலையில் செல்லுது!

சாலை விதிகளை மதித்தே
மகிழ்வாய் தினமும் மிதித்தே
நண்பர் கூட்டம் செல்லுமே!
நன்மை பெற்றதைச் சொல்லுமே!



ஆள்கள் ஒதுங்கி சென்றிட
அழகாய் மணியும் அடிக்கலாம்!
நாள்கள் தினமும் ஓட்டித்தான்
நாமும் நன்கு படிக்கலாம்!

வண்டிச் சக்கரம் போலவே!
வாழ்க்கை சக்கரம் ஓடுது!
வண்டி ஓட்டும் காலமே
வசந்தம் என்று பாடுது!



உடல் வலிமை பெற்றிடுமே!
உள்ளம் நல்லதைக் கற்றிடுமே!
புதிய வாகனம் வந்தாலும்
மிதிவண்டி தான் நண்பனே!







# இவற்றைச் செய்வோம்

## அ) பேசுவோம் வாருங்கள்!

1. எந்தெந்த வாகனங்களை மக்கள் பயணத்திற்குப் பயன்படுத்துவார்கள்?
2. மிதிவண்டி வாங்கிக் கொடுத்தது யார்?
3. நீ மிதிவண்டியை எப்போது பயன்படுத்துவாய்?
4. மிதி வண்டியைப் பயன்படுத்தினால் என்ன பயன்கள் கிடைக்கும்?

## ஆ) பொருள் அறிக :

வேலை, ஆள்கள், வாகனம், வலிமை

## இ) எதிர்ச்சொல் அறிக.

மகிழ்ச்சி X ________ புதிய X ________ நன்மை X ________

## ஈ) கலந்துரையாடுக :

'மிதிவண்டி என் நண்பனே' என்ற தலைப்பில் நணபர்களுடன் கலந்துரையாடுக.




## உ) மிதிவண்டி பற்றி நான்கு அல்லது ஐந்து வரிகள் தகுந்த நிறுத்தற்குறிகளுடன் எழுதுக.

## இருப்புப்பாதையைக் கடக்கும் விதிகள்

ராஜுவும், சீதாவும் தங்கள் சித்தப்பாவுடன் மாட்டு வண்டியில் சென்று கொண்டிருந்தனர். இருப்புப் பாதை கடக்கும் இடத்தில் மாட்டு வண்டி நின்றது.

**ராஜு :** வண்டியை ஏன் நிறுத்தினீர்கள், சித்தப்பா?

**சித்தப்பா :** தொடர்வண்டி இப்பொழுது கடந்து செல்ல இருக்கிறது அதனால் தான்.

**சீதா :** தம்பி இரண்டு பக்கத்திலும் ரிக்ஷா, கார், இரு சக்கர வாகனங்கள், மிதி வண்டிகள் எல்லாம் நிற்கின்றன பார்.

**சித்தப்பா :** அந்தப் பலகையைப் பாருங்கள் நில் - கவனி - செல் என எழுதப்பட்டுள்ளது




விதிகளைப் பின்பற்றுங்கள், பாதுகாப்பாக இருங்கள்

# 8. நேர்மையே வெல்லும்

● வாசிப்போம்! மகிழ்வோம்!

முன்னொரு காலத்தில் தொண்டை மண்டலம் என்றொரு நாடு இருந்தது. மன்னர் தொண்டைமான் அதைச் சிறப்பாக ஆண்டு வந்தார். தனக்குப் பின் நாட்டை ஆளத் தகுந்தவர் யார் என்று யோசித்தார்.

அமைச்சரின் ஆலோசனைப்படி தண்டோரா போடச் சொன்னார். தண்டோரா கேட்ட ஏராளமான இளைஞர்கள் அரண்மனைக்கு வந்தனர்.



மன்னர் அவர்களிடம், “உங்களுக்கு ஆளுக்கு ஒரு விதை தரப்படும். அதைத் தொட்டியில் ஊன்றி நன்றாக வளர்த்து மூன்று மாதங்களுக்குப் பிறகு கொண்டு வாருங்கள். யார் நன்றாக வளர்த்திருக்கிறாரோ அவரே இந்நாட்டின் மன்னராகத் தேர்வு செய்யப்படுவார்” என்றார்.

செழியன் என்ற இளைஞனும் விதையைப் பெற்றுச் சென்றான். தொட்டியில் விதையை ஊன்றி, நீர் ஊற்றிக் கவனித்துக் கொண்டான். விதை முளைக்கவில்லை. கவலையுற்ற செழியன் உழவர்களிடம் ஆலோசனை கேட்டான். அதன்படி முயன்றும் பயன் ஒன்றும் இல்லை. மன்னர் குறிப்பிட்ட மூன்று மாதங்களும் முடிவடைந்தன.



மன்னர் ஆணைப்படி செழியன் தொட்டியுடன் அரண்மனைக்கு சென்றான். அவனைத் தவிர மற்ற இளைஞர்களின் தொட்டிகளில் செழிப்பாக வளர்ந்த செடிகள் இருந்தன.

மன்னரும் அமைச்சர்களும் அனைவரின் தொட்டிகளையும் வரிசையாக பார்வையிட்டனர். கடைசி வரிசையில் நின்ற செழியன் தயக்கத்துடன், ''மன்னா! என்னை மன்னித்து விடுங்கள்! கவனத்துடன் என் உழைப்பை செலுத்தியும் விதை முளைக்கவில்லை.

அவையோர் அனைவரும் மன்னரின் முடிவைக் கேட்க ஆவலாய் இருந்தனர். மன்னர், "அவையோரே! வெறும் தொட்டியுடன் வந்த இந்த இளைஞரையே மன்னராகத் தேர்வு செய்துள்ளேன்" என்று அறிவித்தார். அனைவரும் திகைத்தனர். மன்னரோ மிகவும் பொறுமையாக, ''இந்த இளைஞர் மட்டுமே நேர்மை என்னும் விதையைப் பயிர் செய்துள்ளார். நான் கொடுத்த விதைகள் எல்லாம் செயற்கை விதைகளே! எனவே நேர்மையான இவரே எனக்குப் பின் மன்னராக தகுதியானவர்'' என்று அறிவித்தார். அவையோர். 'நேர்மையே வென்றது' என்று மன்னரையும் செழியனையும் வாழ்த்தினர்.

# இவற்றைச் செய்வோம்

## அ) பொருள் அறிவோம்.

1. ஆணை -
2. ஏராளமான -
3. மன்னர் -
4. தண்டோரா -

## ஆ) பேசுவோம் வாருங்கள்!

1. இந்தக் கதையில் வரும் மன்னன் ஆண்ட மண்டலம் எது?
2. அரசர் இளைஞர்களுக்கு எத்தனை மாதங்கள் கால அவகாசம் கொடுத்தார்?
3. செழியன் யாரிடம் ஆலோசனை கேட்டான்?

## இ) கோடிட்ட இடத்தை தகுந்த சொற்களால் நிரப்புக.

1. மன்னர் ஆணைப்படி ____________ தனது தொட்டியுடன் அரண்மனைக்குச் சென்றான். (குமரன் / செழியன்)
2. நான் கொடுத்த விதைகள் எல்லாம் ____________ விதைகளே! (செயற்கை / தரமான)

## ஈ) எதிர்ச்சொல் எழுதுக.

(முதியவர், குறுகிய, துன்பம், தூற்றுதல்)

1. மகிழ்ச்சி X ____________
2. வாழ்த்துதல் X ____________
3. நீண்ட X ____________
4. இளைஞர் X ____________



## உ) தகுந்த நிறுத்தற் குறிகள் இடுக.

1. வாருங்கள் செல்லலாம்
2. நூலகத்திற்கு ஆசிரியருடன் மாலதி விக்டர் சலீம் மேரி எல்லோரும் சேர்ந்து சென்றனர்

## ஊ) சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. அமைதியாக : ____________________________
2. தயக்கத்துடன் : ____________________________
3. பொறுமை : ____________________________

## எ) கீழ்க்காணும் சொற்றொடர்களை வாசித்து நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.



சரவணன் உணவகத்திற்கு சென்று ஒரு பெண்மணியின் முன்னால் அமர்கிறான்.



அலைபேசி மேஜைமீது இருப்பதைக் காண்கிறான்.



பெண்மணியிடம் கொடுக்கிறான்.



அலைபேசியை மறந்துவிட்டு வெளியே செல்கிறாள்.



பெண்மணியின் பின்னால் செல்கிறான்

**ஆசிரியர் குறிப்பு :** நூலகத்தில் இருந்து பல கதைப் புத்தகங்களை எடுத்து வாசிக்கச் சொல்லவும். அக்கதைகளின் நிகழ்வுகளை வரிசைப்படிக் கூற பயிற்சி அளிக்கவும்.

# 9. மலர்களின் மகத்துவம்

- வாசிப்போம்! மகிழ்வோம்!

அம்மாவும் மகளும் காலையிலே புத்தாடை அணிந்து தலையில் பூச்சூடி சாலையில் நடந்து செல்கின்றனர். இறைவனுக்குப் அணிவிக்க கரங்களில் பூக்களை எடுத்துச் செல்கின்றனர். வழி ஓரமாய் வளர்ந்திருந்த நெருஞ்சி மற்றும் ஆவாரம் செடிகளில் மஞ்சள் நிற பூக்கள் பூத்துக் கிடந்தன.



நெருஞ்சிப்பூக்கள் எல்லோரும் தோட்டத்திலிருந்து மலர்களைப் பறித்து தலையில் சூடுகின்றனர். மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு படைக்கின்றனர், ஆனால் நாம் சாலை ஓரத்தில் இருப்பதால் நம்மை எவரும் விரும்புவது இல்லை, என வருந்தின.

தன் மலர்களைப் பார்த்த நெருஞ்சிச்செடி புன்னகைத்தது. ''என் செல்வங்களே கேளுங்கள்! நாம் மற்ற மலர்களைப் போல் அல்ல. மற்ற மலர்கள் தலையில் சூடவும் கழுத்தில் மாலையாக அணியவும் பயன்படுகின்றன. நம்மிடம் பல நோய்களைக் குணப்படுத்தும் தன்மைகள் உள்ளன. மனிதர்கள் நோய்வாய்ப்படும் போது நம்மைத் தேடி வருவார்கள். நாம் அவர்களுக்கு ஒரு நாள் மட்டும் அல்ல, பல நாட்களுக்குப் பயன்படுவோம்.'' என்றது நெருஞ்சிச்செடி.

நெருஞ்சிப்பூக்கள், ''அம்மா! அப்படி என்ன மருத்துவ குணம் நம்மிடம் உள்ளது'' எனக் கேட்டன. ''நாம் மனிதர்களின் நாள் பட்ட புண்களை குணப்படுத்த உதவுகிறோம். சிறுநீரகத்தில் ஏற்படும் கல் அடைப்பு நோய்க்கு மருந்தாகிறோம்.'' என்றது நெருஞ்சிச்செடி. ''ஆவாரம்பூ க்களால் என்ன பயன், அம்மா?'' என்று ஒரு நெருஞ்சிப்பூ கேட்டது. மனிதர்களின் நீரழிவு நோய்க்கான சிறந்த மருந்தாக ஆவாரம்பூ உள்ளது'' என்று நெருஞ்சிச்செடி சொன்னது.



''அம்மா! இவற்றைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது'' என்றன நெருஞ்சி மலர்கள். நமக்கும் இத்தனை பெருமைகளா? என எண்ணி அவை முகம் மலர்ந்தன.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. உனக்கு எந்தெந்த மலர்கள் பிடிக்கும்?
2. எந்தப் பூக்கள் வருந்தின?
3. நெருஞ்சிப் பூக்களின் மருத்துவ குணம் என்ன?

### ஆ) பொருள் அறிவோம்.

மகத்துவம் - ________ புன்னகை - ________

புத்தாடை - ________ பார்த்த - ________

### இ) குறுக்கெழுத்து புதிரை விடுவிக்க.




**இடமிருந்து வலம்**

1. இருசக்கர வாகனம்
2. பூங்காவில் இருக்கும்
3. மழைக்காலம்
4. வாரத்தின் ஒரு நாள்.

**மேலிருந்து கீழ்**

1. கார்ப்புத் தன்மை உடையது.
2. வாகனம் என்பதன் வேறு சொல்.

### ஈ) இயற்கையின் வளமை தொடர்பான பொன்மொழிகளை தாங்கிய பதாகைகள் தயார் செய்க.

### உ) இன எழுத்துச் சொற்களைக் கண்டுபிடித்து கூறுக.

தங்கப் பாப்பா வந்தாளே!
சிங்கப் பொம்மை தந்தாளே!
பஞ்சு போன்ற கையாலே!
பண்டம் கொண்டு வந்தாளே!

பந்தல் முன்பு நின்றாளே!
கம்பம் சுற்றி வந்தாளே!
தென்றல் காற்றும் வந்ததே!
தெவிட்டா இன்பம் தந்ததே!

**படத்தை பார்ப்பேன் பயனறிந்து கொள்வேன்.**

இயற்கையில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு அன்றாடம் நமது உடலில் ஏற்படும் சிறுசிறு கோளாறுகளைக் குணப்படுத்த முடியும் என இயற்கை மருத்துவம் கூறுகிறது.



வல்லாரைக்கீரை நினைவாற்றலை அதிகரிக்கும்.

துளசி சளி, இருமலைப் போக்க உதவும்.





வேப்பிலை கிருமிநாசினியாகப் பயன்படுகிறது.

இஞ்சி செரிமானத்தை மேம்படுத்துகிறது.





நெல்லிக்கனி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.

**ஆசிரியர் குறிப்பு :** மாணவர்களுக்கு பலவிதமான உரைகளை வாசிக்கத் தரவேண்டும். அந்த உரைகளின் கருத்துகளைச் சுருக்கமாகக் கூறவும் பயிற்சி அளிக்க வேண்டும்.



## மொழியை அறிவோம்

- கீழே கொடுக்கப்பட்ட சொற்றொடர்களைக் கவனியுங்கள்,
- இவை யாவும் " " என்ற இரட்டை மேற்கோள் குறிகளை பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன.

**"நான் நாளை பள்ளிக்கு செல்வேன்" என சுமதி கூறினாள்.**

**"அச்சமில்லை, அச்சமில்லை" என பாரதியார் முழங்கினார்.**

### இரட்டை மேற்கோள் குறிகள்

- ஒருவர் கூறியதை அப்படியே கூறும் நேர்க் கூற்றில் குறிக்க
- ஒரு குறிப்பிட்ட சொற்றொடரைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்படுகின்றன.

---

- கீழே கொடுக்கப்பட்ட சொற்றொடர்களைக் கவனியுங்கள்,
- இவை யாவும் ' ' என்ற ஒற்றை மேற்கோள்குறிகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன.

**முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது பழமொழி.**

**"அவர் என்னிடம் 'நாளை வருகிறேன்' எனக் கூறினார்".**

**அவர் தன்னை 'ஓர் அறிஞர்' என அழைத்துக் கொண்டார்.**

### ஒற்றை மேற்கோள் குறிகள்

- பழமொழிகளைத் தெரிவிக்கும் பொழுதும்,
- இரட்டை மேற்கோளுக்குள் மற்றொரு மேற்கோள் வரும்பொழுதும்,
- ஒரு சொல்லைச் சிறப்பித்துக்கூறும் பொழுதும் பயன்படுத்தப்படுகின்றன.

# 10. செய்தித்தாள்



## வாசிப்போம், மகிழ்வோம்

அன்றாடம் செய்திகளை
அறிந்து கொள்ள வேண்டுமே!
அன்றன்று நடப்பதெல்லாம்
அறிந்து தெரிய வேண்டுமே!

நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை
நாம் அறிந்து கொள்ளணும்!
ஏட்டில் வரும் தகவல்களை
ஏற்றி மனதில் வைக்கணும்!



நம்மைச் சுற்றி நடப்பவற்றை
நாம் உணர்வில் கொள்ளவே!
நமக்கு உதவும் நாளிதழை
நாளும் படித்து மகிழ்வோம்!



## இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. செய்தித்தாளை தவிர வேறு எவற்றின் மூலம் அன்றாட நிகழ்வுகளை அறியலாம்?
2. இந்தப் பாடலின் ஆசிரியர் யார்?
3. நமக்கு நாளிதழ் எவ்வாறு உதவுகிறது?

**ஆ) பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

- அன்றாடம் = ____________

1. வராமல் 2. நாள்தோறும் 3. அறியாமல்

**இ) பின்வரும் சொல்லின் எதிர்ச்சொல்லை எடுத்து எழுதுக.**

- அறிந்து X ____________

1. வராமல் 2. காணாமல் 3. அறியாமல்

**ஈ) சிந்தித்து எழுதுக.**

1. நீ தொலைக்காட்சியில் 'பெரு வெள்ளம்' குறித்த அறிவிப்புகளைக் கேட்டால் என்ன செய்வாய்?
2. செய்தித்தாள்களில் சுத்தம், சுகாதாரம் குறித்து நீ வாசித்த பொன்மொழிகளை எழுதுக.

**உ) கீழே கொடுக்கப்பட்ட சொற்களின் வெவ்வேறு பொருள் அமையும்படி சொற்றொடர் உருவாக்கவும்.**

**எ.கா. மாலை நான் மாலை ஒன்று வாங்கினேன்.**
**மாலை வேளையில் நடைப்பயிற்சி செய்யவேண்டும்.**

**1. தை**

**2. திங்கள்**

**3. அன்னம்**

ஊ) செய்தித்தாளில் நீ படித்த செய்திகளை வகுப்பில் கூறுக.




## எ) பத்தியை வாசித்து கேள்விகளுக்கு விடையளி

கோடை விடுமுறையில் ஒரு நாள் மாலை நேரம் அமுதனின் தந்தை அவனையும் அவன் தங்கை சிவரஞ்சனியையும் கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவர்கள் மிகவும் மகிழ்வோடு விளையாடினர். அமுதன் மணலில் வீடு ஒன்றைக் கட்டினான். அவன் தங்கை சிவரஞ்சனி சிப்பிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து வீட்டை அழகுபடுத்தினாள்.

1. அமுதனும் சிவரஞ்சனியும் எங்கு சென்றனர்?
2. மணலில் வீடு கட்டியது யார்?
3. சிவரஞ்சனி சிப்பிகளைக் கொண்டு என்ன செய்தாள்?

## ஏ) செயல்திட்டம்

★ செய்தித்தாளில் உனக்குப் பிடித்த செய்திகளைக் கத்தரித்து தொகுப்பேட்டில் ஒட்டுக. மேலும் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

**ஆசிரியர் குறிப்பு :** செய்தித்தாள்களில் உள்ள தலைப்புச் செய்திகளை வாசித்து அச்செய்திகளில் உள்ள புதிய சொற்களின் பொருளை அகராதியில் தேட பயிற்சி அளிக்கவும். செய்திகளை மாணவர்கள் புரிந்து கொண்டனரா என உறுதி செய்ய வேண்டும்.

# வாரீர் பயன்பெறுவீர்

**வாசிப்புப் பகுதி**



வனவிழாவை முன்னிட்டு வனத்துறை அதிகாரிகள் திருமதி. ஸ்ரீலக்ஷ்மி IFS மற்றும் திரு. யஷ்வந்த் நிகம் IFS விதவிதமான பூஞ்செடிகளையும், மூலிகைச் செடிகளையும், இலவசமாக வழங்குகின்றனர்.



நாள் : 01.07.2026

நேரம் : காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை

இடம் : இயற்கை பூங்கா, சயான், மும்பை.

## செடிகளை நேசிப்பீர்!

## வளர்ப்பீர்!

## பயன்பெறுவீர்!





# 11. யானையும் பானையும்

• **வாசிப்போம்! மகிழ்வோம்!**

(அரச சபை கூடி நீண்ட நேரமாகியும் தெனாலிராமன் வராததைக் கண்டு கோபமுற்ற அரசர் காவலாளியைக் கூப்பிட்டு தெனாலிராமனின் வீட்டுக்குச் சென்று அழைத்து வரச் சொன்னார்)
(காவலாளியும் தெனாலிராமனும் அரசவைக்கு வருகிறார்கள்)

**அரசர்** : என்ன தெனாலிராமா! ஏன் இன்றும் தாமதமாக வருகிறீர்?

**தெனாலிராமன்** : அரசே! மன்னிக்க வேண்டும். அழுது கொண்டிருந்த என் மகனை சமாதானப்படுத்தி வருவதற்குள் போதும்... போதும்... என்றாகிவிட்டது.

**அரசர்** : (சிரித்துக் கொண்டே) குழந்தையின் அழுகையை அடக்க உங்களால் முடியவில்லை என்பதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. புத்திசாலியான நீங்கள் இப்படி கூறலாமா?

**தெனாலிராமன்** : அரசே! குழந்தைகளின் அழுகையை நிறுத்துவதற்கு எப்படியெல்லாம் சமாதானப்படுத்த வேண்டும் தெரியுமா?

**அரசர்** : தெனாலிராமா... நீங்கள் கூறுவதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை! நானாக இருந்தால் கணப்பொழுதில் குழந்தையின் அழுகையை நிறுத்தி இருப்பேன்.

**தெனாலிராமன்** : அரசே! நான் என்னை சிறு குழந்தையாக நினைத்துக் கொண்டு நடிக்கிறேன். என்னை எப்படி சமாதானப் படுத்துவீர்கள்? என்பதைப் பார்ப்போம்.

**அரசர்** : குழந்தையைப் போல அடம்பிடித்து அழப்போகும் உம்மை சமாதானப்படுத்த வேண்டும்! எங்கே ஆரம்பியுங்கள்...

(தெனாலிராமன் குழந்தையைப் போல கண்களைக் கசக்கிக் கொண்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்து விட்டார், தெனாலிராமனின் அழுகையைக் கண்ட அரசர், தந்தையாக மாறி கனிவோடு கேட்டார்)

அரசர் : கண்ணா அழாதேடா! உனக்கு லட்டு தரட்டுமா? மிட்டாய் தரட்டுமா? நல்ல பிள்ளையாக அவற்றைத் தின்றுவிட்டு அழாமல் இரு!

(தெனாலிராமன் எதுவும் சொல்லாமல் தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தார்)



அரசர் : என்னடா கண்ணா.... விளையாடுவதற்கு பொம்மை எதுவும் வேணுமா?

தெனாலிராமன் : எனக்கு யானை வேண்டும்.

அரசர் : யாரங்கே! யானை பொம்மையை கொண்டு வாருங்கள்

தெனாலிராமன் : யானை பொம்மை வேண்டாம், நிஜ யானை வேணும்.

அரசர் : அரண்மனை யானையை அழைத்து வாருங்கள்.

தெனாலிராமன் : ஐ...! யானை! யானை! (தெனாலிராமன் மீண்டும் அழுகையைத் தொடர்ந்தார்)

அரசர் : என்ன செல்லம்! யானை தான் வந்துவிட்டதே! அப்புறம் ஏன் அழுதுகொண்டு இருக்கிறாய்?

தெனாலிராமன் : அதுவா... எனக்கு விளையாட ஒரு பானை வேண்டும்.

அரசர் : யார் அங்கே? குழந்தைக்கு விளையாட ஒரு பானை கொண்டு வாருங்கள்.

(காவலாளி ஒரு பானையை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார். தெனாலிராமனோ தனது அழுகையை நிறுத்தவில்லை)

அரசர் : குழந்தாய்! நீ கேட்ட யானையும் பானையும் வந்துவிட்டது. அழாமல் விளையாட வேண்டும், சரியா?

தெனாலிராமன் : மாட்டேன்! அந்த யானையை இந்தப் பானைக்குள் போகச் சொல்லு.



அரசர் : யானை பெரிது, இந்த சிறிய பானைக்குள் எப்படி போகும் தங்கம்?...

(அரசர் யானையை பானைக்குள் எப்படி போகச் செய்ய முடியும் என்று அறியாமல் திகைத்தார்).

அரசர் : தெனாலிராமரே! குழந்தைகளின் அழுகையை நிறுத்திச் சமாதானப்படுத்துவது மிகவும் சிரமமே. உமது கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன்.

தெனாலிராமன் : நன்றி அரசே!

## இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்!**

1. நீ தெனாலிராமன் கதைகளைப் படித்து இருக்கிறாயா?
2. தெனாலிராமன் எப்படிப்பட்டவர்?
3. அரசர் ஏன் கோபம் அடைந்தார்?
4. அரசர் என்னென்னப் பொருள்கள் தருவதாக குழந்தையிடம் கூறினார்?

**ஆ) சிந்தித்து பதில் எழுதுக.**

1. தெனாலிராமன் ஏன் அரசவைக்குத் தாமதாக வந்தார்?
2. அரசரால் தெனாலிராமனை சமாதானப்படுத்த முடிந்ததா? ஏன்?

**இ) இணையத்தில் இருந்து இதைப்போன்ற நகைச்சுவைக் கதைகளைத் தேடி வாசித்து வகுப்பில் கூறவும்.**

**ஈ) இந்த நாடகத்தை வகுப்பில் நண்பர்களோடு சேர்ந்து நடித்து காட்டுக.**

உ) கொடுக்கப்பட்டச் சொற்களை வைத்து படத்தை வருணனை செய்து கூறுக.

**பெரிய**

**அழகான**

**நிறைய**



## ஊ) தகுந்த வினைச்சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

(ஆடுகிறாய், செய்கிறார், இறைக்கிறாள், படிக்கிறேன், கற்பிக்கிறார்)

1. ஆசிரியர் பாடங்களைக் ____________________
2. நான் நன்றாக ____________________
3. தாத்தா உடற்பயிற்சி ____________________
4. அவள் நீர் ____________________
5. நீ நன்றாக ____________________

## எ) குறிப்புகளைக் கொண்டு அழகான படம் ஒன்றை வரைக.

ஓர் அழகான வீடு. அதனருகில் ஒரு பெரிய மரம். வீட்டின் பின்னால் மலைகள் இருக்கின்றன. வானத்தில் சூரியன் ஒளி வீசுகிறது. பறவைகள் பறக்கின்றன.



**ஆசிரியர் குறிப்பு :** மாணவர்கள் தாங்கள் வாசித்த கதைகளை வகுப்பில் கூறவும். உரையாடல் வடிவில் அக்கதைகளை எழுதவும் பயிற்சி அளிக்க வேண்டும்.

## 12. இனியவை நாற்பது

ஏவது மாறா இளங்கிளமை முன்இனிதே
நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே
ஏருடையான் வேளாண்மை தான்இனிது ஆங்குஇனிதே
தேரின்கோள் நட்புத் திசைக்கு.

விளக்கம் : சொல்வதைக் கேட்டு நடக்கும் இளமைப் பருவம் மிகவும் இனிமையானது. நாள்தோறும் குற்றங்கள் இல்லாமல் அறிவைக் கற்றல் மிக இனியது. ஏர் உடைய உழவனின் தொழில் இனியது ஆராய்ந்து கொள்கின்ற நட்பு எல்லா திசைகளிலும் பெருமை சேர்க்கும்.

கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது

விளக்கம் : கற்றவர்களின் முன் தான் கற்ற கல்வியை உரைத்தல் மிக இனிது. அறிவில் சிறந்தவர்களைத் துணையாகக் கொள்வது இனிது. எள் அளவு கூடதான் பிறரிடம் இரவாது தான் கொடுத்தல் எல்லாவற்றையும் விட இனிதாகும்.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. எப்படிப்பட்ட இளைமைப் பருவம் இனியது?
2. எத்திசையிலும் பெருமை சேர்க்கும் நட்பு எது?
3. உன்னுடைய நண்பர்களின் திறமைகள் யாவை?
4. யாரைத் துணையாகக் கொள்தல் இனிது?

### ஆ) சிந்திப்போம் எழுதுவோம்.

1. உன் பெற்றோரின் நற்குணங்களைப் பற்றி எழுதுக.
2. பள்ளியில் உன் நண்பன் சாப்பிட ஒன்றும் கொண்டு வரவில்லை. உன் டிபன்பாக்ஸில் உனக்குப் பிடித்தப் பூரி கிழங்கு உள்ளது. நீ என்ன செய்வாய்?

### இ) சொல்லின் பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நவை ______________

அ. நகைப்பு　　ஆ. செல்வம்　　இ. குற்றம்

2. ஈதல் ______________

அ. கடன்　　ஆ. கொடுத்தல்　　இ. கேட்டல்

### ஈ) எதிர்ச்சொல்லைத் தேடி எழுதுக.

1. நட்பு X ______________

அ. தோழமை　　ஆ. பகை　　இ. அன்பு

2. இரவாது X ______________

அ. ஈதல்　　ஆ. இரந்து　　இ. செய்து

### உ) சரியான சொல்லைத் தேர்ந்து சொற்றொடரை நிறைவு செய்க.

1. ஏவது மாறா ______________ முன் இனிதே (இளங்கிளைமை/முதுகிளமை)
2. ஏருடையான் வேளாண்மை தான் ______________ (செழுமை/இனிது)

## ஊ) தகுந்த சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. அவன் ____________ வரைந்தான்.

2. வசந்தி ____________ பேசினாள்.

3. மான் ____________ ஓடும்.

4. நீ ____________ பாடினாய்.




## எ) நூலகத்தில் இருந்து புத்தகங்கள் சிலவற்றை எடுத்து, உற்றுநோக்கி அட்டவணையைப் நிரப்புக.

| புத்தகத்தின் பெயர் | விலை | பதிப்பாளர் பெயர் | அச்சிடப்பட்ட ஆண்டு | ஆசிரியர் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |



உழவுத்தொழில் குறித்து சில சொற்றொடர்களை அழகான கையெழுத்தில் எழுதுக.

## ஏ) செயல் திட்டம் : இணைய நூலகத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை பெரியவர்களிடம் கேட்டு அறியவும்.

**ஆசிரியர் குறிப்பு :** செய்யுள் பாடல்களைப் பிழையின்றி வாசிக்க, அறிமுகமற்ற புதிய சொற்களை அடையாளங் காண பயிற்சி கொடுக்க வேண்டும். பின்னர் அச்சொற்களின் பொருள்களை இணையத்திலோ, அகராதியிலோ தேடப் பயிற்சி அளிக்க வேண்டும்.

# 13. போறாளே பொன்னுத்தாயி...

● பாடி மகிழ்வோம்.



போறாளே பொன்னுத்தாயி
பள்ளிக்கூடம் போறாளே பொன்னுத்தாயி

மயிலிறகு கண் சிமிட்ட
குண்டு மணியும் சிதறிக் கிடக்க
பட்டாம் பூச்சிகள் வழிகாட்ட
கண்ணீரைத் துடைத்துக்கொண்டே
(போறாளே பொன்னுத்தாயி)



காதணிகள் காற்றில் ஆட
சிற்றாடை சுழன்று வர
கால் கொலுசு கலகலக்க
காட்டு மலரைத் தலையில் சூடி...
(போறாளே பொன்னுத்தாயி)

காட்டாறு சலசலக்க
மலை அருவி வழி அனுப்ப
வனமெல்லாம் பூத்துக் குலுங்க
வான்மேகம் வாழ்த்துச் சொல்ல
(போறாளே பொன்னுத்தாயி)

வளைந்து நெளிந்த பாதையிலே
ஓடி ஆடி விளையாடி
நாவல் பழத்தின் நிறத்தையே
நாவில் பெற்ற மகிழ்வுடனே
(போறாளே பொன்னுத்தாயி)





## இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. பாடத்தில் வரும் சிறுமியின் பெயர் என்ன?
2. அவள் எங்கே போகிறாள்?
3. பொன்னுத்தாயி சென்ற காட்டு வழி எப்படி இருந்தது?
4. இந்தப் பாடல் உனக்கு பிடித்திருக்கிறதா? ஏன்? காரணம் கூறுக.

**ஆ) சிந்திப்போம் எழுதுவோம்.**

1. பொன்னுத்தாயி பள்ளிக்கு எப்படி அலங்கரித்துக் கொண்டு சென்றாள்?
2. உனக்குப் பள்ளி செல்ல பிடிக்குமா? நீ யாருடன் பள்ளி செல்ல விரும்புவாய்?

**இ) கிராமப் பள்ளிகளுக்கும் நகரப் பள்ளிகளுக்கும் உள்ள வேறுபாடுகளை உன் பெற்றோரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு அட்டவணையை நிரப்புக.**





| பள்ளி | நகரம் | கிராமம் |
|---|---|---|
| இடம் | | |
| பள்ளியின் யெர் | | |
| கட்டிட அமைப்பு | | |
| மைதானம் | | |

**ஈ) பத்தியில் உள்ள இன எழுத்துகளை அடிக்கோடிடுக.**

இயற்கையின் நிலப் பிரிவுகள் காடுகள், மலைகள், வயல்கள், கடல்கள், பாலைவனங்கள் என ஐந்து வகைப்படும். கிருஷ்ணா, கோதாவரி, பீமா போன்ற ஆறுகள் இங்கே பாய்கின்றன. இந்த ஆறுகள் மகாராஷ்டிரா மாநிலத்தில் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுகின்றன.




## உ) தகுந்த நிறுத்தற் குறிகளிட்டு பத்தியை மீண்டும் எழுதுக.

பொன்னுத்தாயி ஒரு சிறுமி அவள் பள்ளி செல்லும் வழி ஒரு மலைப்பாதையாகும் அப்பாதையிலேயே மயிலிறகு சிதறிக் கிடக்க குண்டுமணிகள் கண் சிமிட்ட காட்டாறு சலசலக்கும் பாதையிலே தனியாக வர பயமாக இல்லையா என்று ஒருநாள் ஆசிரியர் கேட்டார் கல்வி கற்க பல இன்னல்களை சந்திக்கத் தானே வேண்டும் என அவள் பதில் கூறினாள்.

## ஊ) பதில் இங்கே! கேள்வி எங்கே?

எ.கா. மாலா என்ன வரைந்தாள்?

விடை : மாலா படம் வரைந்தாள்

1. ________________________

பறவை வானில் பறக்கிறது.

2. ________________________

நாய் வேகமாக ஓடுகிறது

3. ________________________

சுதா பையைத் தேடினாள்.

## எ) வாக்கியங்களை இணைத்து எழுதுக.

எ.கா. தமிழரசி போட்டியில் பங்கேற்றாள். வெற்றி பெற்றாள்.
விடை : தமிழரசி போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றாள்.

1. அம்மா கடைக்கு சென்றாள். காய்கறிகளை வாங்கினாள்.

________________________

2. விண்ணரசி பள்ளி சென்றாள். பாடம் படித்தாள்.

________________________

3. கதிர் காலையில் எழுந்தான். பல் துலக்கினான்.

________________________

**ஆசிரியர் குறிப்பு :** பள்ளி நிகழ்ச்சிகளில் இப்பாடலை அபிநயத்தோடு பாட வாய்ப்புத் தரவும். வாசித்த பாடல் பகுதியின் கருத்தைச் சுருக்கமாகக் கூற மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.



## மொழியை அறிவோம்

**ஆசிரியை :** ஒவ்வொருவராக மூன்றுபேர் இந்த பலகைகளைப் பிடித்து கொள்ளுங்கள் மற்றவர்கள் வாசியுங்கள்!




**மாணவர்கள் :** இராமு வரைந்தான் படம்

**ஆசிரியை :** இவை யாவும் சொற்கள். இப்பொழுது நான் கூறுவதன்படி மாற்றி நில்லுங்கள் பின்னர் படியுங்கள்.




**மாணவர்கள் :** இராமு படம் வரைந்தான்

**ஆசிரியை :** இதைப்போன்ற பொருள் பதிந்த சொற்களின் தொகுப்பை வாக்கியம் என்கிறோம்.

இராமு படம் வரைந்தான் - இதில் வரைந்தது யார்? **இராமு**
எதை வரைந்தான்? **படம்**
என்ன செய்தான்? **வரைந்தான்**

**இராமு -** எழுவாய்,
**படம் -** செயப்படுப்பொருள்,
**வரைந்தான் -** பயனிலை
வாக்கியத்தின் கூறுகள் **எழுவாய், செயப்படுப்பொருள், பயனிலை** ஆகும்.

# 14. மகிழ்ச்சியான தீபாவளி

## வாசிப்போம்! மகிழ்வோம்!

விஜயா பள்ளியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். காலையில் அவள் அம்மா கூறிய செய்தி அவளின் நினைவிற்கு வந்தது. அவளும் அம்மாவும் தீபாவளி கொண்டாட்டத்திற்காக அலங்கார பொருட்கள் வாங்க கடைக்கு செல்கிறோம் என்பதே ஆகும். கடைக்கு செல்வதை நினைத்தாலே மனது இனித்தது.

பள்ளியிலிருந்து வீடு திரும்பும் வழியில் புதிதாக அலங்கார கைவிளக்குகள் விற்கும் சிறு சிறு கடைகள் போடப்பட்டிருந்தன. அங்கே ஒரு அம்மா கூடை நிறைய வண்ண களிமண் விளக்குகளை வைத்திருந்தார். அவர் அருகில் ஒரு சிறுமி அழுது கொண்டிருந்தாள். விஜயா இரக்கத்துடன் சிறுமி என்ன சொல்லி அழுகிறாள்? என்று கூர்ந்து கேட்டாள்.



"அம்மா எனக்கு தீபாவளிக்கு புத்தாடை வாங்கித் தா" என்று கூறி அழுதாள் சிறுமி. அம்மா அவளிடம் "இந்த விளக்குகள் அனைத்தும் விற்று முடியட்டும் அந்த பணத்தை கொண்டு உனக்கு புத்தாடை வாங்கித் தருவேன்" என்று பதில் கூறினார். இதை கேட்ட விஜயா ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

விஜயா வீடு திரும்பியதும் அலமாரியில் வைத்திருந்த உண்டியலை எடுத்தாள். அதை உடைத்து அதில் உள்ள பணத்தை ஒரு கைப்பையில் எடுத்துக்கொண்டாள். அம்மாவுடன் அலங்காரப் பொருள்கள் வாங்கப் புறப்பட்டாள்.

வீட்டை அலங்கரிக்க பளபளக்கும் வண்ண காகிதங்கள், கோலப்பொடி பொதிகள், தொங்கல்கள் ஆகியவற்றை வாங்கினாள். அவளுக்காக கைவளை, நெத்திச்சுட்டி, மணிமாலை, காதணி என பல்வேறு பொருள்களை வாங்கினாள். பின்னர் அவள் தன் அன்னையை சிறுமி நின்ற கூடைக்கார அம்மாவிடம் அழைத்துக் கொண்டு வந்தாள். அம்மா ஒரு டஜன் கைவிளக்குகளை வாங்கினார்.



ஆனால் விஜயாவோ அனைத்து விளக்குகளையும் வாங்கும்படி அம்மாவிடம் கூறினாள். தன்னிடம் உள்ள பணம் முழுவதையும் கொடுத்து தான் கேட்டதையும் அம்மாவிடம் கூறினாள். விஜயாவின் கனிவைக் கண்டு அம்மாவின் கண்கள் பனித்தன. இருவரும் வீடு திரும்பினர். அந்த ஆண்டு தீபாவளி அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளியாக அமைந்தது.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. விஜயா தன் அம்மாவுடன் எங்கே சென்றாள்?
2. விஜயா என்னென்ன பொருள்களை வாங்கினாள்?
3. தீபாவளி திருநாள் கொண்டாட நீ வீட்டை எவ்வாறு அலங்கரிப்பாய்?
4. பள்ளியில் கொண்டாடப்படும் விழாக்கள் யாவை?

### ஆ)



பொருளுடன் இணைக்க.

| சொல் | பொருள் |
|---|---|
| தீ |  |
| கோ |  |
| ஆ |  |
| பூ |  |

### இ) குழுவில் சேராதவற்றை வட்டமிடுக.

1. தீபாவளி, பொங்கல், ஆட்டம், ஹோலி
2. காதணி, காலணி, கழுத்தணி, பின்னணி
3. மஞ்சள், வெங்காயம், சிவப்பு, நீலம்



குறிப்புகளைப் பயன்படுத்தி ஐந்து அல்லது ஆறு வாக்கியங்கள் கொண்ட பத்தியினை எழுதுக.

**குறிப்புகள் :**

பொங்கல் | தை மாதம் | புத்தாடை | புதுப்பானை | பொங்கலோ பொங்கல்

- **தீபாவளி திருநாள் கொண்டாட்டத்தைப் பற்றி படம் ஒன்று வரைந்து வண்ணம் தீட்டுக.**



**ஊ) விஜயாவிற்கு அவளுடைய அம்மாவிற்கும் இடையே நடந்த உரையாடலைத் தகுந்த நிறுத்தற்குறிகளுடன் உன் சொந்த மொழியில் எழுதுக.**

அம்மா : ____________________

விஜயா : ____________________

அம்மா : ____________________

விஜயா : ____________________

**ஆசிரியர் குறிப்பு :** அன்றாட நிகழ்வுகளைக் கூற, வகுப்பு தோழர்களுடன் கலந்துரையாட வாய்ப்பு தரவேண்டும். சிறப்பு தின நிகழ்ச்சிகளில் வாழ்த்துகளைத் தெரிவிக்கவும். மாணவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும்.

# 15. உழவே தலை

- **உரையாடி மகிழ்வோம்!**

(ஜேம்ஸ், ரீனா விளையாடிவிட்டு வீட்டுக்கு வருகின்றனர்.)

**ஜேம்ஸ்** : அம்மா பசிக்கிறது! சாப்பாடு தாருங்கள்.

**அம்மா** : முதலில் கை கால்களை நன்றாகக் கழுவிவிட்டு வாருங்கள். பிறகு சாப்பிடலாம்.

(இருவரும் சாப்பிட அமர்கின்றனர்)

**ஜேம்ஸ்** : அம்மா! பருப்பு சாதமா? எனக்கு பிடிக்காது.

**ரீனா** : பருப்பு சாதம் உடம்புக்கு நல்லது அண்ணா!

**அம்மா** : நாளை உனக்குப் பிடித்த உணவைச் சமைத்து தருகிறேன். இப்பொழுது இதை வீணாக்காமல் சாப்பிடு.

**ஜேம்ஸ்** : இல்லை அம்மா! எனக்கு உணவு வேண்டாம்.



**அம்மா** : இந்த உணவு உன் தட்டில் வர எத்தனை பேரின் உழைப்பு உள்ளது தெரியுமா?

**ரீனா** : ஏன் அம்மா! கடையில்தானே அரிசி வாங்கினீர்கள்.

**அம்மா** : கடையில் அரிசியாக வருவதற்கு முன்னால் அதில் எத்தனை பேரின் உழைப்பும் எவ்வளவு கஷ்டமும் உள்ளது தெரியுமா?

**ஜேம்ஸ்** : அதில் என்ன கஷ்டம்! அரிசி செடியிலிருந்து தானே கிடைக்கிறது?

**ரீனா** : அரிசி எந்தச் செடியிலிருந்து கிடைக்கிறது?
சொல் அம்மா!

**அம்மா** : அரிசி செடியிலிருந்து அல்ல உழவர்களின் உழைப்பால் நெற்பயிரில் இருந்து கிடைக்கிறது.



**ரீனா** : அம்மா! உழவர்கள் நெற்பயிரை எப்படி வளர்ப்பார்கள்?

**அம்மா** : உழவர்கள் முதலில் விதை நெல்லை வயலில் தூவி விதைப்பர்.
பின்னர் முளைத்து வளர்ந்த நாற்றுகளைப் பிடுங்கி வயலில் நடுவார்கள்.



**ஜேம்ஸ்** : பிறகு என்ன செய்வார்கள்?

**அம்மா** : நாற்றுகளை நட்டபின், பயிருக்கு தண்ணீர் பாய்ச்சுதல், களைஎடுத்தல், உரம் இடுதல், பாதுகாத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள்.

**ரீனா** : அம்மா! எத்தனை நாள்களில் அரிசி கிடைக்கும்?

**அம்மா** : நெற்பயிரில் 90 நாள்கள் முதல் 180 நாள்களுக்குள் நெற்கதிர்கள் வரும்.
முற்றிய கதிர்களை அறுவடை செய்து போர் அடித்து



நெல்லைப் பிரித்து எடுப்பார்கள். நெல்லில் இருந்து உமியை நீக்கியபின் அரிசி கிடைக்கும்.

**ஜேம்ஸ்** : அவர்கள் இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா, அம்மா?

**அம்மா** : ஆமாம் கண்ணா! அதனால் தான் நமக்கு உணவு கிடைக்கிறது. எனவே தான் திருவள்ளுவர்

**'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை**

என்று திருக்குறளில் கூறுகிறார்.

**ரீனா** : இந்தத் திருக்குறளின் பொருள் என்ன அம்மா?

**அம்மா** : உலகில் எத்தனை தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழிலே தலைசிறந்தது. ஏனெனில் எல்லா தொழில் செய்பவரும் உணவுக்காக உழவுத் தொழிலையே நம்பி இருக்கிறார்கள்.

**ஜேம்ஸ்** : என்னை மன்னித்து விடுங்கள் அம்மா. இனிமேல் உணவை வீணாக்க மாட்டேன். இதோ சாப்பிடுகிறேன்.

**அம்மா** : மகிழ்ச்சி செல்வங்களே! எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு எடுத்து நன்றாக சாப்பிடுங்கள்.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்.

1. அம்மா என்ன சாதம் செய்து இருந்தார்கள்?
2. யாருக்கு பருப்பு சாதம் பிடிக்கவில்லை?
3. உனக்குப் பிடித்த உணவுகள் யாவை?
4. ஜேம்ஸ் ஏன் சாப்பிட மறுத்தான்?
5. எத்தனை நாள்களில் நெற்பயிரை அறுவடை செய்வார்கள்?

### ஆ) உழவுத் தொழில்களின் செயல்களை வரிசைப்படுத்துக. வட்டத்தில் எண்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| விதை தூவுதல் | நாற்று நடுதல் | அறுவடை செய்தல் |
| பாதுகாத்தல் | களை எடுத்தல் | தண்ணீர் பாய்ச்சுதல் |

**இ) சிந்தித்து எழுதுக.**

1. உழவுத்தொழில் பற்றிய விடுகதைகள் யாவை?
2. நெல் கடையிலிருந்து கிடைக்கிறது என்று கூறுவதை நீ நம்புகிறாயா?

**ஈ) உன் வீட்டில் நடந்த விருந்தில் உணவு அதிகமாக சமைக்கப்பட்டு விட்டது என்றால் உன் அம்மாவிடம் நீ என்ன கூறுவாய் என எழுதுக?**

______________________________

______________________________

**உ) இப்பாடத்தின் மூலம் நீ உணர்ந்த நீதி யாது?**

______________________________

**ஊ) இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள திருக்குறளை அழகான கையெழுத்தில் எழுதவும்.**

______________________________

______________________________



**தகுந்த நிறுத்தற்குறிகள் இடுக.**

1. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ
2. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா

**ஆசிரியர் குறிப்பு :** உரையின் முக்கியக் கருத்தைப் புரிந்து கொண்டு அதனை சுருக்கமாகவும், வரிசையாகவும் கூறப் பயிற்சி அளிக்க வேண்டும்.

# அறுவடைத் திருநாள்

இயற்கை அன்னைக்கு நன்றி செலுத்தும் வகையில் நம் நாட்டு மக்கள் கொண்டாடும் விழா அறுவடைத் திருவிழா ஆகும்.

தமிழகத்தில் பொங்கல் என்ற பெயரில் நான்கு நாள்கள் கொண்டாடப்படும் இவ்விழா, கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம், குஜராத் மாநிலங்களில் ‘சங்க்ராந்த்’ என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. வட இந்தியாவில் பஞ்சாபில் ‘லோஹ்ரி’ என்ற பெயரிலும், ‘பிஹு’ என்ற பெயரில் அஸ்ஸாமிலும் கொண்டாடப்படுகிறது.

இத்திருவிழாக்களின் போது கடைபிடிக்கப்படும் மரபுகள், கொண்டாட்டங்கள் யாவும் தனித்துவமானவை. எடுத்துகாட்டாக பஞ்சாபின் பாங்க்ரா நடனம், குஜராத்தில் பட்டம் விடுதல், தமிழகத்தின் சமூகப் பொங்கல் போன்றவற்றைக் கூறலாம்.





# 16. கணக்குப் போட்ட யானை

- பாடி மகிழ்வோம்.



யானை ஒன்று காட்டினிலே
கடை ஒன்று வைத்ததுவாம்
காய்கறியும் பழங்களும் தான்
வகை வகையாய் இருந்ததுவாம்



காட்டு விலங்குகள் கூடியே
கடையில் வந்து நின்றனவாம்
கணக்குப் போட முடியாமல்
யானையண்ணா முழித்தாராம்.



கவலை வேண்டாம் யானைஅண்ணா
கணினி இருக்குது என் கையில்
கற்றுக் கொடுப்பேன் கணக்கையே
ஆறுதல் சொன்னதே சிறுமுயலும்



கணினி பேனா ஒன்றினிலே
தொடுதிரையை தடவியேதான்
கணக்குப் போட்ட யானைஅண்ணா
நன்றி சொன்னாராம் முயலுக்கே.

- **இப்பாடலை வகுப்பறையில் தனியாகவும் குழுவாகவும் பாடவும்.**

# இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. யானையண்ணாவின் கடையில் இருந்த பொருள்கள் யாவை?
2. யானையண்ணா ஏன் திரு திரு என முழித்தார்?
3. நீ யாருடன் கடைக்குச் சென்று உள்ளாய்?
4. கடையில் இருந்து என்னென்ன பழங்கள் வாங்கி வருவாய்?

**ஆ) சிந்தித்து எழுதுக.**

1. உன் பெற்றோரோடு கடைக்குச் செல்லும்போது வாங்கும் பொருள்களின் விலைகளை எப்படி சரி பார்ப்பாய்?

**இ) கதையை நிறைவு செய்க.**

யானை அண்ணா கணக்கு போட தெரியாமல் முழித்தது.
முயல் _____________ __________________

**ஈ) தகுந்த பதிலிப்பெயர்களை வினைச்சொற்களோடு சேர்த்து வாக்கியங்கள் அமைக்கவும்.**




**ஆசிரியர் குறிப்பு :** பாடலை வாசித்து அதன் முக்கியக் கருத்தை சுயமொழியில் கூறவும் எழுதவும் பயிற்சி அளிக்க வேண்டும்.



# மொழியை அறிவோம்



ஏணியில் ஏறினாள்



ஏணியில் ஏறுகிறாள்.



ஏணியில் ஏறுவாள்.

அடிக்கோடிட்ட சொற்களைக் கவனியுங்கள். ஏறினாள், ஏறுகிறாள், ஏறுவாள் இச்சொற்கள் செயல்களையும் செயல்கள் நடைபெறும் காலங்களையும் காட்டுகின்றன.

| | |
|---|---|
| **இறந்தகாலம்** | **படித்தான், பாடினான், ஓடின** |
| **நிகழ்காலம்** | **பாடுகிறாள், படிக்கிறான், ஓடுகிறான்** |
| **எதிர்காலம்** | **பாடுவாள், படிப்பான், ஓடுவான்** |

- ஒரு செயல் நிகழ்ந்து முடிந்ததை உணர்த்துவது **இறந்தகாலம்** ஆகும்.
- ஒரு செயல் நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்த்துவது **நிகழ்காலம்** ஆகும்.
- ஒரு செயல் நிகழப்போவதை உணர்த்துவது **எதிர்காலம்** ஆகும்.

- **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நேற்று மழை ____________. (பெய்யும் / பெய்தது)

2. சரோஜினி நாளை ஊருக்கு ________ . (செல்வாள் / செல்லுகிறாள்)

3. கோவிந்தன் இன்று பாடங்களைப் ____________.(படிக்கிறான்/ படிப்பாள்)

# 17. விழிப்புணர்வு

## • வாசிப்போம்! மகிழ்வோம்!

என் பெயர் வினோத். நான் மிகவும் நல்ல பையன். நான் ஆசிரியருக்குக் கீழ்படிந்து அனைத்துப் பாடங்களையும் நன்றாகப் படிக்கும் மாணவன். அன்று ஒரு நாள் பள்ளியில் தேர்வு. இன்று சரியான நேரத்திற்கு பள்ளிக்கு போக வேண்டும் என நானே எழும்பி விட்டேன். வீடு மிகவும் அமைதியாக இருந்தது.



என்னைக் குரல் கொடுத்து எழுப்பிக் கொண்டே சமையலறையில் வேலை செய்யும் அம்மா அங்கே இல்லை. அம்மாவிற்கு காய்கறி நறுக்கிக் கொண்டு ஏதேனும் உதவி செய்து கொண்டு இருக்கும் அப்பாவையும் காணவில்லை. ஐய்யோ! பள்ளிக்கு நேரமாகிறது என மளமளவென குளித்தேன். சாப்பிட ஒன்றும் இல்லை. ஒரே ஒரு ஆப்பிளை எடுத்துக்கொண்டு பள்ளிக்கு விரைந்தேன். மாலை வீட்டுக்கு வரும் வரை பெற்றோரை பற்றிய சிந்தனை தான் அதிகமாக இருந்தது.

பக்கத்து வீட்டு அக்கா கொடுத்த சாவியை வைத்து வீட்டுக் கதவைத் திறந்தேன். வீடு அலங்கோலமாக இருந்தது. என் அம்மா இருந்திருந்தால் வீட்டை எவ்வளவு தூய்மையாக



வைத்திருப்பார்கள். அப்பா ஏதேனும் பண்டம் வாங்கித் தட்டில் போட்டு வைத்திருப்பார். என்றெல்லாம் நினைத்து ஏங்கினேன். ஒரே பசியாக இருந்தது. சமையலறைக்குச் சென்று பார்த்தேன். சமையலறையில் பாத்திரங்கள் அப்படியே இருந்தது. பாத்திரங்களை கழுவி சமையலறை மேஜையைத் தூய்மை செய்தேன். பின்னர் குளிர் சாதனப்பெட்டியைத் திறந்து பார்த்தேன். பிரட், ஜாம் இருந்தது. சாப்பிட எடுத்துக்கொண்டு சாப்பிடும் மேஜையில் அமர வந்தேன். அதன் மேலும் பொருள்கள் சிதறிக்கிடந்தன. அவற்றையும் ஒழுங்கு படுத்தினேன். பிறகு சாப்பிட்டுவிட்டு அப்படியே தூங்கிவிட்டேன். தூக்கத் தில் அப்பா, அம்மா எங்கே போனீங்க? என அலறினேன்.



“ஏய், வினோத்! என்ன சத்தம்! எழுந்து போய் பல் துலக்கு!” என உரத்த குரலில் அம்மா கூறுவதைக் கேட்டேன். ஓடிப்போய் சமையலறையில் இருந்த அம்மாவை அணைத்துக் கொண்டேன். பாத்திரம் விளக்கிக் கொண்டு இருந்த அப்பாவை பார்த்து ஒரு சிரிப்பு. என்னாயிற்று உனக்கு? என்ற அம்மாவிடம், “நீ நேற்று எங்கே போனாய்?” எனக் கேட்டேன். “ஏதாவது கனவு கண்டாயா? நான் எங்கும் போகவில்லை” என்றாள் அம்மா.

அப்படி என்றால் அந்த நிகழ்வு கனவா? நல்லவேளை என நினைத்துக் கொண்டேன். அப்பா அம்மா இல்லாத உலகத்தை என்னால் கற்பனை செய்யவே முடியவில்லை. இனிமேல் அவர்களை மகிழ்விக்க நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என நினைத்துக் கொண்டேன். நீங்களும் அப்படித்தானே நண்பர்களே!

# இவற்றைச் செய்வோம்

## அ) பேசுவோம் வாருங்கள்!

1. வீடு ஏன் அமைதியாக இருந்தது?
2. வீட்டுச் சாவியைக் கொடுத்தது யார்?
3. அம்மா உரத்த குரலில் என்ன கூறினார்?

## ஆ) சிந்தித்து எழுதுக.

காலை வேளையில் உன் பெற்றோருக்கு எவ்வாறு உதவுவாய்?

## இ) தேடி எழுதுக.

1. வேளை என்பதன் பொருள்

அ. நாள் ஆ. நேரம் இ. பணி

2. கனவு என்ற சொல்லின் எதிர்ச்சொல்.

அ. நினைவு ஆ. நனவு இ. ஆசை

## ஈ) பாடத்தின் இரண்டாம் பத்தியில் வரும் இன எழுத்துச் சொற்களை எழுதுக.

## உ) பாடத்தில் உள்ள வினைச்சொல்லின் காலங்களை மாற்றி எழுதுக.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| குளித்தேன் | ________ | ________ |
| திறந்தேன் | ________ | ________ |
| கேட்டேன் | ________ | ________ |

**ஆசிரியர் குறிப்பு :** அன்றாட அனுபவங்களை வெளிப்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்புகள் தரப்பட வேண்டும். வாசித்த இலக்கியங்களின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகக் கூறவும் பயிற்சிகள் தரவேண்டும்.

# 18. வீரமங்கை வேலுநாச்சியார்

## • வாசிப்போம்! மகிழ்வோம்!

பேருந்து நின்றது. குழந்தைகள் மகிழ்ச்சியாகக் குரல் எழுப்பினர்.

“குழந்தைகளே! சிவகங்கை வந்துவிட்டோம், வரிசையாக இறங்குங்கள்!” என்று ஆசிரியை ஆயிஷா கூறினார்.

குழந்தைகள் இறங்கினார்கள். ஒரு பெரிய கட்டடம். வாசலில் வாளோடு கம்பீரமாக நிற்கும் ஒரு பெண்ணின் சிலையைப் பார்த்ததும் குழந்தைகள் கை தட்டினார்கள்.



ஆசிரியை ஆயிஷா, “குழந்தைகளே! இதுதான் வீர மங்கை வேலு நாச்சியார் சிலை. ஆங்கிலேயருடன் போராடி வெற்றி பெற்ற வீரமிக்க அரசி!” என்று குழந்தைகளிடம் பெருமிதமாகக் கூறினார்.

குழந்தைகளின் கைதட்டல் ஒலியும் மகிழ்ச்சி குரலும் அதிகரித்தன. “வாங்க! கோட்டைக்கு உள்ளே போகலாம்” என்று ஆசிரியை சொன்னதும் குழந்தைகள் ஆர்வமாக உள்ளே நுழைந்தனர். மிகப்பெரிய கதவுளைக் கடந்தனர். பெரிய மைதானம். அதில் கம்பீரமாக ஒரு மகாராஜாவின் சிலை இருந்தது. அனைவரும் அருகே சென்றனர்.

“இவர்தான் சிவகங்கை சமஸ்தான முதல் அரசர் வீர முத்து வடுகநாத சசிவர்ண உடையாத்தேவர். இவர் ஆண்ட பகுதியை சிவகங்கைச் சீமை என்று பெருமிதமாக அழைப்பார்கள். இந்தப் பகுதியை ஆண்ட மன்னர்கள் தொடர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டனர். அதில் முக்கியமான ஒருவர் தான் வீரமங்கை வேலு நாச்சியார்” என்று ஆசிரியை சொன்னார். பெண் அரசி வீரமுடன் போர் செய்திருக்கிறார் என்று குழந்தைகள் பெருமிதம் கொண்டனர்.

“தமிழம்மா, அரசர் தானே ஆட்சி செய்வாங்க, அரசி எப்படி இங்கே ஆட்சி செய்தார்?” என்று சூசை கேட்டான்.

“ஆஹா! சிறப்பான கேள்வி கேட்டாய் சூசை. வாழ்த்துகள்!” என்று ஆசிரியை பாராட்டினார்.

சிவகங்கை சீமையின் இணைடாவது அரசர் முத்து வடுகநாதர். அவரது மனைவியே வேலு நாச்சியார். டச்சுக்காரர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் வரி கொடுக்க முடியாது என்று அரசர் அறிவித்தார். அவர்கள் படையெடுத்து வந்தனர். கடுமையான போர். இறுதி வரை போரிட்டு முத்து வடுநாதர் மறைந்தார். சிவகங்கை ஆட்சியை ஆங்கிலேயர் பிடித்துக் கொண்டனர் என்று ஆசிரியை சொல்லி நிறுத்தினார்.



“அப்போ, வேலு நாச்சியார் என்ன ஆனாங்க?” என்று உமர் கேட்டான்.

ம்ம்ம்... போரில் தோல்வி, கணவரும் இல்லை, என்ன செய்ய? வேலு நாச்சியார் மனம் தளரவில்லை. திண்டுக்கல் போனாங்க. அங்குள்ள அரசர் கோபாலர் பாதுகாப்பு கொடுத்தார். மைசூர் அரசர் மாவீரர் ஹைதர் அலியும் உதவினார். ஏழு ஆண்டுகள் கடுமையான அலைச்சல். தொடர் முயற்சியால் ஹைதர் அலி அனுப்பிய குதிரைப்படை, பீரங்கிப் படைகளுடன் வேலு நாச்சியார் சிவகங்கைச் சீமைக்குக் கிளம்பினார். அவரது படைத்தளபதிகளே மாவீரர்கள் மருது சகோதரர்கள். ஆசிரியையின் குரலிலேயே வீரம் வெளிப்பட்டது.

ஆகா... ஏழு ஆண்டுகள் முயற்சி செய்து போராடிய வீர மங்கை! என்று ரமணன் பெருமிதமாகக் கூறினான்.

ஆமாம், வீர மங்கை தன் நாட்டை மீட்டார். சில ஆண்டுகள் ஆட்சி செய்த பிறகு மருது சகோதரர்களிடம் நாட்டைக் கொடுத்தார். அவர்களும் சிறப்பாக ஆண்டனர். ஆங்கிலேயருக்கு வரி கொடுக்க மறுத்தனர். அவர்களோடு பல ஆண்டுகள் போராடி உயிர் துறந்தனர். ஆசிரியை குரலில் சோகம். குழந்தைகள் சிலருக்குக் கண்ணீர் துளிர்த்தது.

“அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் எழுப்பிய சிவகங்கைச் சீமையின் கோட்டைக்குள் நிற்பதே நமக்குப் பெருமை!” என்று ஆசிரியை ஆயிஷா கூறினார்.

குழந்தைகள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் வீரத்துடனும் சிவகங்கைச் சீமை! எங்கள் சிவகங்கைச் சீமை! என்று முழங்கினர்.

# இவற்றைச் செய்வோம்

## அ) பேசுவோம் வாருங்கள்!

1. குழந்தைகள் யாருடைய சிலையைப் பார்த்ததும் கைதட்டினர்?
2. சிவகங்கை சமஸ்தான முதல் அரசன் யார்?
3. முத்து வடுநாதர் யார்?
4. மைசூர் அரசர் எவ்வாறு வேலுநாச்சியாருக்கு உதவினார்?

## ஆ) சிந்தித்து எழுதுக.

1. ஆசிரியை ஆயிஷா எதனைப் பெருமை என கூறினார்?
2. நீ உன் வகுப்பு ஆசிரியருடன் சென்று வந்த களப்பயணம் பற்றிய அனுபவத்தை எழுதுக.

## இ) தேடி எழுதுக.

1. மங்கை என்ற சொல்லின் வேறுபெயர் ____________

அ. அன்னை    ஆ. பெண்    இ. தாய்

2. வெற்றி என்ற சொல்லின் எதிர்ச்சொல்

அ. வீரம்    ஆ. போர்    இ தோல்வி

## ஈ) சொற்களை வரிசைப்படுத்தி வாக்கியங்களை உருவாக்குக.

அ. ராமன் படித்தான் பாடம்.

ஆ. போட்டது யானை கணக்கு.

இ. முயல் வந்தது ஓடி.

ஈ. இருந்தன பழங்கள் கடையில்



உ) ‘சிவகங்கை’ ஊரில் மறைந்துள்ள சொற்களை எழுதுக.

______________ ______________

ஊ) சுதந்திர போராட்ட வீரர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை நூலகத்தில் உள்ள புத்தகங்களில் இருந்து எடுத்து வாசிக்கவும். பின்னர் பள்ளி நிகழ்ச்சியில் 8 முதல் 10 வாக்கியங்கள் பேசுக.

எ) செய்தித்தாளில் உள்ள தலைப்புச் செய்திகளை வாசித்து, அச்செய்திகளைக் கல்வி, விளையாட்டு, உள்ளூர் செய்திகள் என வகைப்படுத்துக.

ஏ) சொல் அட்டைகளை வைத்து சொற்றொடர்களை உருவாக்குக.




ஆசிரியர் குறிப்பு : உரையை வாசித்து அதன் முக்கிய கருத்தைக் சுயமொழியில் கூறவும் எழுதவும் பயிற்சி அளிக்க வேண்டும்.



## மொழியை அறிவோம்

### கீழே உள்ள சொற்றொடர்களை வாசியுங்கள்.



அவள் **வேகமாக** ஓடுகிறாள்



அவன் **இனிமையாகப்** பாடுகிறான்

**ஓடுகிறாள், பாடுகிறான்** போன்ற செயல்கள் எவ்வாறு நடைபெற்றன? என்பதை குறிக்க **வேகமாக, அழகாக, இனிமையாக** என்ற சொற்கள் பயன்படுகின்றன. இத்தகைய சொற்களே வினையடைச் சொற்கள் ஆகும்.

ஒரு செயல் எவ்வாறு, எப்போது, எங்கே நடைபெறுகிறது என்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் சொற்களே **வினையடைச் சொற்கள்** ஆகும்.

### வினையடைச் சொற்களை வட்டமிடுக.

1. பூனை கீழே அமர்ந்தது.
2. இராமு மெதுவாகப் பேசினான்.
3. நான் நேற்று பாடினேன்.
4. நாய் சப்தமாகக் குரைத்தது.
5. மாணவர்கள் வரிசையாகச் சென்றனர்.

# 19. விடியல்

- **பாடி மகிழ்வோம்**



சேவல் ஒன்று கூரையிலே
ஏறி நின்று கூவியதாம்
விடியலை அறிந்த மனிதருமே
விழித்தே எழுந்தனர் மகிழ்வோடு

ஏரைப் பிடிக்கும் விவசாயி
பல்தொழில் செய்யும் தொழிலாளி
நூலைக் கற்கும் மாணவரும்
தத்தம் பணியை தொடங்கினரே

உலகம் விழித்தது என்னாலே
மானுடம் இயங்குவது என்னாலே
நாளை கூவாது நிற்பேனே
சேவலும் கர்வம் கொண்டதுவே

அடுத்த நாளும் வந்திடவே
ஆதவன் உதித்தது கிழக்கினிலே
ஒளியைக் கண்ட மனிதருமே
மகிழ்வுடன் தம்பணி தொடங்கினரே

கொண்டையை ஆட்டி சேவலுமே
அங்கும் எங்கும் பார்த்ததுவே
உலகை இயக்குவது இயற்கையே
என்றே புரிந்து கொண்டதுவே

உண்மையை உணர்ந்து தலைகுனிய
கர்வம் தானாய் மறைந்ததுவே.



## இவற்றைச் செய்வோம்

**அ) பேசுவோம் வாருங்கள்.**

1. சேவல் கூவுவதை பார்த்து இருக்கிறாயா? அது எப்படி கூவும்?
2. சேவல் எப்போழுது கூவும்?
3. நீ காலையில் எத்தனை மணிக்கு கண் விழிப்பாய்?

**ஆ) சிந்தித்து எழுதுக.**

1. சேவலின் கர்வம் எவ்வாறு நீங்கியது?
2. காலை வேளையில் நீ காணும் இயற்கை காட்சிகள் பற்றி மூன்று அல்லது நான்கு சொற்றொடர்களை எழுதுக.

**இ) பாடலில் இருந்து மாற்றுச் சொற்களைத் தேடி எழுதுக.**

சூரியன் ________. வையகம் ________. அதிகாலை ________.

**ஈ) விடுகதையை வாசிப்பேன். விடையோடு பொருத்துவேன்.**

| | |
|---|---|
| 1. வட்டமாக இருக்குமே வண்டி ஓட உதவுமே. |  |
| 2. வெடித்து சிதறுவான். |  |
| 3. அடிக்காமல் தட்டாமல் கண்ணீரை வரவழைப்பான். |  |
| 4. மூன்று திருடர்களைச் சுற்றி பன்னிரெண்டு காவல்காரர்கள். |  |

## உ) படங்களைப் பார்த்து 6 அல்லது 8 வரிகளில் உன் கருத்தை எழுதுக.



**ஆசிரியர் குறிப்பு :** கும்மி பாடல்கள், கிராமியப் பாடல்களை இணையத்தில் தேடி வகுப்பறையில் குழுவாக பாடி மகிழ்க.

# 20. திருக்குறள்

## அன்புடைமை



அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு

**தெளிவுரை :** அன்பு பிறரிடத்து ஆர்வத்தைக் கொடுக்கும் அந்த ஆர்வமே நட்பு என்னும் அளவற்ற சிறப்பைக் கொடுக்கும்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

**தெளிவுரை :** அன்பு இல்லாதவர் எல்லாமே தமக்கு உரிமை என்று நினைப்பர். அன்பு உடையவரோ தம் எலும்பையும் பிறருக்கு உரியதாக்கி மகிழ்வர்.

## அறிவுடைமை



அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்

**தெளிவுரை :** அறிவுடையார் பின்னால் வர இருப்பதை முன்பே அறிய வல்லவர் அறிவு இல்லாதவரோ அதனை அறிய இயலாதவர் ஆவர்.

அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

**தெளிவுரை :** அறிவுடையவர் வேறு செல்வம் இல்லாது இருப்பினும் எல்லாம் உடையவரே ஆவர். அறிவில்லாதவர் எல்லா செல்வங்களும் உடையவராயினும் ஒன்றும் இல்லாதவரே ஆவர்.

## வாய்மை



வாய்மை எனப்படுவது யாதெனில்
யாதொன்றும் தீமை இலாத சொலல்.

**தெளிவுரை :** உண்மை என்று சிறப்பித்து சொல்லப்படுவது எது என்றால் எந்த உயிருக்கும் யாதொரு தீமை செய்யாத சொற்களைச் சொல்லுவதே ஆகும்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

**தெளிவுரை :** நீராடுவதால் உடலின் வெளிப்புறத் தூய்மை உண்டாகும். உண்மை பேசுவதால் உடலின் உட்புறமான மனம் தூய்மை அடையும்.

## கேள்வி



செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம்
அச்செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை

**தெளிவுரை :** செல்வங்களுள் சிறப்புடைய செல்வம் செவியால் கேட்கப்படும் செல்வமாகும் அச்செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானதாகும்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

**தெளிவுரை :** நல்லவற்றை எந்த அளவுக்குக் கேட்கிறோமோ அந்த அளவுக்கு அவை நிறைந்த பெருமையை கொடுக்கும்.

## இவற்றைச் செய்வோம்

### அ) பேசுவோம் வாருங்கள்!

1. வாய்மை எனப்படுவது யாது?
2. செல்வத்துள் சிறந்த செல்வம் எது?
3. அன்பின் சிறப்புகள் யாவை?
4. அறிவுடையாரின் இயல்புகள் யாவை?

### ஆ) அகராதியில் தேடுக.

| | |
|---|---|
| ஆக்கம் | ஆன்ற |
| என்பும் | செவிச் செல்வம் |
| வாய்மை | தலை |
| தீமை | எனைத்தானும் |



### இ) ஒத்த ஓசையுடைய சொற்களை எழுதுக.

1. அன்புஈனும் : ____________________
2. வாய்மை : ____________________
3. புறந்தூய்மை : ____________________
4. எனைத்தானும் : ____________________

### ஈ) சரியானச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தோட்டத்தில் பூப் ____________
2. கரும்பலகையில் ____________
3. வரிசையில் ____________
4. படம் ____________






**திருக்குறள் குறித்து உன் சொந்த மொழியில் ஐந்து அல்லது ஆறு வரிகள் குறிப்புகளைப் பயன்படுத்தி எழுதுக.**

திருக்குறள் - திருவள்ளுவர் - பொதுமறை - மூன்று பகுதிகள் - அதிகாரங்கள் - குறட்பாக்கள் - சிறப்பு.

## உ) செய்திப்பலகையை வாசித்து செய்தியை அறிந்து கொள்க.



### செய்திப் பலகை

நம் பள்ளியில் திருவள்ளுவர் தினவிழா கொண்டாடப்பட இருக்கிறது.

| | | |
|---|---|---|
| நாள் | : | 16.01.2027 |
| நேரம் | : | காலை 11 மணி |
| இடம் | : | பள்ளி அரங்கம் |
| போட்டிகள் | : | திருக்குறள் ஒப்பித்தல்,<br>திருக்குறள் கதைகள் கூறல் |

அனைவரும் வாருங்கள்!
பங்கேற்று மகிழுங்கள்!

## ஊ) அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்ட வினையடைச் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

(நன்றாக, தெளிவாக, மெதுவாகப்)

1. ____________________ பேசு
2. குமுதா ____________________ சமைப்பாள்.
3. ____________________ எழுத வேண்டும்.

**ஆசிரியர் குறிப்பு :** திருக்குறள்களை பொருள் அறிந்து மனனம் செய்து கூற ஊக்குவிக்க வேண்டும். திருக்குறள் கதைகளை இணையத்தில் தேடி வாசிக்கவும் உதவ வேண்டும்.



## மொழியை அறிவோம்

**குமரன் என்ன செய்கிறான்? படியுங்கள்.**



படிக்கிறான்



ஓடுகிறான்



உண்கிறான்

**குமாரி என்ன செய்கிறாள்? படியுங்கள்.**



படிக்கிறாள்



ஓடுகிறாள்



உண்கிறாள்

மேலே உள்ள படங்களில் மூன்று காலங்களிலும் குமரன் - ஆண்பால் மற்றும் குமாரி - பெண்பால் - செய்யும் செயல்களைக் குறிக்கும் சொற்கள் உள்ளன அல்லவா?

இவ்வாறு காலங்களைக் குறிக்கும் ஆண்பால் வினை முற்றுகளின் இறுதியில் 'ஆன்' என்ற விகுதியும், பெண்பால் வினை முற்றுகளின் இறுதியில் 'ஆள்' என்ற விகுதியும் வரும்.

# 21. காக்கைகளின் எண்ணிக்கை

- உரையாடி மகிழ்வோம்.

(அக்பரின் அரசவையில் அறிஞர்களும் புலவர்களும் குழுமி இருந்தார்கள். நகைச்சுவை விரும்பியான அக்பர் திடீரென ஒரு புதுமையானக் கே
கள்வியைக் கேட்டார்)

அக்பர் : அவையோரே! எனக்கு ஒரு ஐயம். நம் தலைநகரில் மொத்தம் எத்தனை காகங்கள் உள்ளன?

அமைச்சர்கள் : அரசே! தலைநகரில் எத்தனை ஆறுகள் உள்ளன? எத்தனை மலைகள் உள்ளன? என்று கேட்டால் பதில் கூறலாம். காக்கைகளின் எண்ணிக்கை யாருக்குதான் தெரியும்?

(பீர்பால் அமைதியாக இருப்பதை கவனித்த அக்பர்)

அக்பர் : பீர்பால் அவர்களே! இதற்கு உங்கள் பதில் என்ன?



**பீர்பால்** : அரசே! நான் இதற்கு விடை தருகிறேன். ஆனால் எனக்கு நான்கு நாள்கள் அவகாசம் தேவை.

**அரசர்** : சரி, நான்கு நாள்களுக்குப் பின் விடையுடன் வாருங்கள்.

**பீர்பால்** : ஆகட்டும் அரசே!

**(நான்கு நாட்களுக்குப் பிறகு பீர்பால் அரசவைக்குள் நுழைகிறார்.)**

**அக்பர்** : பீர்பால் அவர்களே! விடை கிடைத்ததா?

**பீர்பால்** : ஆம் அரசே! நமது தலைநகரில் மொத்தம் 2341 காக்கைகள் உள்ளன.

**அக்பர்** : அமைச்சரே! எப்படி இவ்வளவு சரியாக சொல்கிறீர்கள்?

**அமைச்சர்களில் ஒருவர்** : பீர்பால் அவர்களே! தாங்கள் கூறியதை விட அதிகமாக இருந்தால்...

**பீர்பால்** : அமைச்சர் பெருமானே! அவை வெளியூரிலிருந்து இங்கு விருந்தாளிகளாக வந்திருக்கும்.

**வேறொரு அமைச்சர்** : பீர்பால், தாங்கள் கூறியதை விடக் குறைவாக இருந்தால்...

**பீர்பால்** : நமது தலைநகரில் உள்ள காகங்கள் வெளியூருக்கு சென்றிருக்கும்.

**(பீர்பாலின் இப்பதில்களால் அவையோர் அனைவரும் ஆச்சரியத்தில் திகைத்தனர்)**

**அக்பர்** : அருமையான பதில் பீர்பால் அவர்களே! உங்கள் அறிவுக் கூர்மையை பாராட்டுகிறேன்.

**பீர்பால்** : நன்றி அரசே!

அருமை! அருமை! அருமை! பீர்பால் அவர்களின் புத்திக் கூர்மை! மிக மிக அருமை!

## இவற்றைச் செய்வோம்

### ஆ) பேசுவோம் வாருங்கள்!

1. இந்த நாடகத்தின் முக்கிய கதாபாத்திரங்கள் யார், யார்?
2. அக்பரின் ஐயம் யாது?
3. பீர்பால் நான்கு நாள்கள் அவகாசம் எதற்காகக் கேட்டார்?
4. காகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று பீர்பால் கூறினார்?

### இ) சிந்தித்து விடை எழுதுக.

1. காகங்களின் எண்ணிக்கையை உன்னால் எண்ண முடியுமா? காரணம் எழுதுக

2. இதைப் போன்ற வேறு எந்த வேலைகளை உன்னால் செய்ய முடியாது என சிந்தித்து பதில் எழுதுக.

### ஈ) பேச்சு வழக்குச் சொற்களுக்குப் பதிலாக எழுத்து வழக்குச் சொற்களை எழுதி பத்தியை மீண்டும் எழுதுக.

அம்மாசை அன்னைக்கு ஆகாசத்தில நிலா இருக்காது. எல்லா இடத்துல ஒரே இருட்டாய் இருக்கும். எங்க அம்மா அப்ப வெளிய போகக்கூடாதுன்னு சொல்லும். ஆனா எனக்கு பயமில்ல.

### உ) பத்தியை படித்து தகுந்த தலைப்பு எழுதுக.

மாறன் என்றொரு சிறுவன் இருந்தான். அவன் நண்பர்களோடு விளையாடச் சென்ற இடத்தில் ஒரு மாமரம் இருந்தது. மாறனும் அவனது நண்பர்களும் மாங்காய்களை கல்லால் அடித்து கீழே விழவைத்து உண்பார்கள். ஒரு நாள் அவ்வழியே வந்த முனிவர் மரத்தை கல்லால் அடிப்பதைத் தடுத்தார். இம் மரத்தின் கனிகள் பழுத்தால் தானாகவே கீழே விழும். அப்பொழுது சாப்பிடுங்கள்! என்றார். இதைக் கேட்ட மாறன் மனம் திருந்தினான்.




**எ) பத்தியை வாசித்து தகுந்த நிறுத்தற் குறிகளிட்டு மீண்டும் எழுதுக.**

தெனாலிராமன் ஊரில் திருட்டு பயமாக உள்ளது உன்னுடைய நகைகளை எங்கே வைத்திருக்கிறாய் என்று மனைவியிடம் கேட்டார். பெரிய மரப்பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருக்கிறேன் என்று தெனாலிராமனின் மனைவி கூறினார்.

**உ) சொற்களை இணைத்து தொடரை நீட்டித்து எழுதுக.**

| நான் படித்தேன் | கண்ணன் ஓடுகிறான் |
|---|---|
| நான் பாடம் படித்தேன். | |
| நான் அறிவியல் பாடம் படித்தேன். | |
| நான் நேற்று அறிவியல் பாடம் படித்தேன். | |
| நான் நேற்று காலையில் அறிவியல் பாடம் படித்தேன். | |

**எ) தகுந்த வினைச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கவிதா பள்ளிக்குச் ____________ (சென்றாள் / சென்றான்)
2. மதன் சந்தைக்குப் ____________ (போவான் / போவாள்)
3. கந்தன் படம் ____________ (வரைவாள் / வரைவான்)

ஆசிரியர் குறிப்பு : நாடகத்தை வாசித்து கதையைக் கூற மாணவர்களை ஊக்கப்படுத்தவும். சிறு பத்திகளைத் தகுந்த நிறுத்தற் குறியிட்டு எழுதவும் பயிற்சி தரவேண்டும்.

# மிதிவண்டி ஊர்வலம்

**வாசிப்புப் பகுதி**

என் பெயர் தாரா. நான் நான்காம் வகுப்பில் படிக்கிறேன். நான் என் நணபர்களோடு பள்ளிக்கு நடந்து சென்ற பொழுது, சைக்கிள் பேரணியை பார்த்தேன். சைக்கிள்களில் பல பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

'சுத்தம் சுகம் தரும்', 'தூய்மை பேணுவீர், நலம் பெறுவீர்', போன்ற வாக்கியங்கள் நாம் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைக்கப்பட வேண்டியதின் அவசியத்தைக் கூறுகின்றன என்பதை புரிந்து கொண்டோம்.

வகுப்பில் எங்கள் ஆசிரியரிடம் சைக்கிள் பேரணியில் சேர விருப்பத்தைத் தெரிவித்தோம். எட்டாம் வகுப்பிற்குச் சென்ற பிறகு கலந்து கொள்ளலாம் என ஆசிரியர் எங்களுக்கு ஊக்கம் அளித்தார். அந்த நாள் என்று வரும் என ஆவலோடு காத்திருக்கின்றோம்.



## சொல் அகராதி



1. அச்சம் - பயம்
2. அல்லும் - இரவும்
3. அருமையான - மிக சிறப்பான
4. அன்றாடம் - நாள்தோறும்
5. ஆக்கம் - ஆர்வம்
6. ஆதவன் - சூரியன்
7. ஆணை - கட்டளை
8. ஆன்ற - மிகவும் சிறந்த
9. ஆன்றோர் - அறிஞர்
10. இரவாது - பிறரிடம் கேட்காமல்
11. இடுக்கண் - துன்பம்
12. இறுதி - கடைசி
13. இனிது - இனிமையான
14. ஈதல் - கொடுத்தல்
15. எண்ணினார் - நினைத்தார்
16. என்பும் - எலும்பும்
17. ஏர் - கலப்பை
18. ஏராளமான - அதிகமான
19. ஒளி - வெளிச்சம்
20. கணப்பொழுது - நொடிப்பொழுது
21. கர்வம் - தற்பெருமை
22. கனிவு - இரக்கம்
23. கூவி - உரக்க சத்தமிட்டு
24. சாதுரியம் - அறிவுத்திறன்
25. தண்டோரா - பறை
26. தலை - முதன்மை

27. திங்கள் - மாதம்
28. திரை - அலை
29. தீமை - தீங்கு
30. நட்பு - தோழமை
31. பஞ்சம் - வறட்சி
32. புரவி - குதிரை
33. மகிமை - சிறப்பு
34. மானுடம் - மனித இனம்
35. முயன்றும் - முயற்சி செய்தும்
36. மெச்சுதல் - பாராட்டுதல்
37. வளம் - செழிப்பு
38. வலிமை - உறுதி
39. வாய்மை - உண்மை
40. விடியல் - அதிகாலை
41. வென்றது - வெற்றி பெற்றது







**அன்பு குழந்தைகளே!**

**யாராவது ஒருவர் உங்களை தவறான முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்க வேண்டாம். நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.**

1. **உங்களை நீங்களே குறை சொல்லாதீர்கள்.**
2. **நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.**
3. **நீங்கள் போக்சோ மின்னஞ்சல் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு புகார் தெரிவிக்கலாம்.**

**நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.**
**நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை. ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.**




இந்த பொத்தானை அழுத்தவும்

POCSO e-box ncpcr@gov.in ல் கிடைக்கும்

**நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக்கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால் ....**

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்...
அது உங்கள் வாழ்க்கையையும் உங்கள் நண்பர்களின் வாழ்க்கையையும் மாற்றக்கூடும்.

CHILD LINE
1098
NIGHT & DAY

**துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.**

புதிய விடியலை நோக்கி

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்

# राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।

मகாராஷ்டிர மாநிலப் பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக்கழகம், புனே.

बालभारती इयत्ता चौथी (तमिळ माध्यम)

69.00